வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු


மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 29.09.2022 வியாழக்கிழமை | இதழ் : 284 | பக்கங்கள் : 16

# தேசிய பேரவையை புறக்கணிக்க பிரதானமான கட்சிகள் தீர்மானம்!

## இன்றைய கூட்டம் பிசுபிசுக்கும் நிலை

கொழும்பு, செப்ரெம்பர் 29

தேசியக் கொள்கைகளை வகுப்பதற்கான தேசிய பேரவையில் அங்கம் வகிக்கப்போவதில்லை என்று எதிரணியிலுள்ள பிரதான அரசியல் கட்சி கள் நேற்று அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளன.

15



## ஜனாதிபதி ரணில்- மோடி ஜப்பானில் சந்தித்து பேச்சு

ரோக்கியோ, செப். 29

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையில் சிநேகபூர்வ சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின் சோ அபேயின் இறுதி நிகழ்வில் பங்கேற்பதற் காக சென்றிருந்த நிலையிலேயே நேற்று முன்தினம் மாலை இந்த சந்திப்பு இடம்

15

## இந்தியா செல்ல முயற்சித்த 6 பேர் கடற்படையால் கைது

### மூவருக்கு விளக்கமறியல்

மன்னார், செப். 29

சட்டவிரோதமாக படகு மூலம் இந்தியா செல்ல முயன்ற 6 பேர் தலைமன்னார் கடற் பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட நிலை யில் இவர்களில் மூவரை எதிர்வரும் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதவான் நேற்று புதன் கிழமை மாலை உத்தரவிட் டார்.

15

## 1 இறாத்தல் பாண் 500 ரூபா?

கொழும்பு, செப். 29

வெதுப்பக உற்பத்தி பொருட்களின் விலையை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி முதல் அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங் கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்தார்.

பாண் ஒரு இறாத்தலை 500 ரூபாவிற்கு விற் பனை செய்வதற்கு வெதுப்பக உரிமையாளர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறி னார்.

பெறுமதி சேர் வரி மற்றும் சமூக பாதுகாப்பு ஒத்துழைப்பு வரி அதிகரிக்கப்பட்டுள்ளமையி னால் வெதுப்பக உணவு பொருட்களின் விலையை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

நூற்றுக்கு 08 வீதமாக அறவிடப்பட்ட பெறுமதி சேர் வரியானது 15 வீதமாக

15

## ஜப்பான் பிரதமரை நேற்று சந்தித்த ஜனாதிபதி ரணில்



ரோக்கியோ, செப். 29

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் ஜப்பா னிய பிரதமர் புமியோ கிஷிடாவுக்கும் இடையி லான சந்திப்பு நேற்று முற்பகல் ரோக்கியோவில் உள்ள அகசகா மாளிகையில் நடைபெற்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அன்புடன் வரவேற்ற ஜப்பானிய பிரதமர், ஜனாதிபதி யாக பதவியேற்றதற்கு தனது வாழ்த்துகளை இதன்போது தெரிவித்தார்.

15

## பயங்கரவாத தடை சட்டத்துக்கு எதிராக மட்டக்களப்பில் கையெழுத்து வேட்டை



மட்டக்களப்பு, செப். 29

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராகக் கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை நேற்று மட்டக்களப்பு - ஆரையம்பதியில் நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக் கியன் ஆகியோர் தலைமையில் இந்தக் கையெ ழுத்துத் திரட்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்

15

## கட்சித் தலைவர்களின் விசேட கூட்டம் இன்று

கொழும்பு, செப். 29

பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழு வின் விசேட கூட்டம் நேற்று காலை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெற்றது.

பாராளுமன்றில் அடுத்த வாரத்தின் செயற்பாடு கள் குறித்து தீர்மானிப்பதற்காக இந்தக் கூட்டம் நடைபெற்றதாக பாராளுமன்றச் செயலாளர் நாய கம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்துள்ளார்.

நியமிக்கப்படவுள்ள கோப் மற்றும் கோபா உள்ளிட்ட குழுக்களை அமைப்பது

15

## கடன்பட்ட தொழில்முனைவோருக்கு அதிகபட்ச நிவாரணம் வழங்குங்கள்!

### வங்கிகளிடம் இராஜாங்க அமைச்சர் கோரிக்கை

கொழும்பு, செப். 29

நிலவும் பொருளாதார நெருக்கடியை கருத்தில் கொண்டு வங்கிகளின் நிதி நிலைமையை பாதுகாத்து கடன் பெற்ற தொழில் முயற்சியாளர்களுக்கு அதிக பட்ச நிவாரணம் வழங்குமாறு நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய கோரியுள் ளார்.

பணப்புழக்கத்தைப் பாதுகாக்க வங்கிகள்

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

அண்மைக்காலமாக யாழ்ப்பாணத்திலிருந்து கிடைக்கின்ற செய்திகள் இந்த சமூகத்தை நேசிக்கும் ஒவ்வொருவருக்கும் கவலையளிப்பவைதான்.

ஒரு சமூகத்தில், அனைத்துவிதமான சமூக பிறழ்வுகளும் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடக்கத்தான் வேண்டும். அப்போதுதான் அந்த சமூகம் ஒரு ஜனநாயக வெளியில் வாழ்வதாக அர்த்தம் கொள்ளலாம்.

அவ்வப்போது சில வன்முறைச் சம்பவங்கள் பதிவாகலாம். சிலர் போதை வஸ்துக்கு அடிமையாகலாம். பாலியல் குற்றங்கள் இடம்பெறலாம். இவையெல்லாம் நடக்கவில்லை என்றால், அங்கே ஏதோ ஒருவகையான கடும் கட்டுப்பாடுகள் இருப்பதாக கொள்ளவேண்டியிருக்கும்.

ஆனால் நமது மண்ணில் நடக்கின்ற சம்பவங்கள் மிகுந்த கவலையளிப்பவையாக மாறியிருக்கின்றன. போதைப் பாவனை என்பது சர்வ சாதாரணமான வெற்றிலை, பாக்கு போடுகின்ற சமாச்சாரம்போல மாறியிருக்கின்றது.

இந்த செய்திகள் தருகின்ற கவலை, இந்த சமூகத்தை உண்மையாக நேசிக்கின்ற ஒவ்வொருவருக்கும் இரத்தக் கண்ணீரை வரவழைக்கின்றது.

இந்த வேளையில் செய்தியோடு செய்தியாக ஈழநாடுவில் வெளிவந்த செய்தி ஒன்று கவனத்தைப் பெற்றது.

அது செய்தி மட்டுமல்ல. ஒரு போதனை. அதனை அப்படியே இந்த ஊர்க்குருவியின் வாசகர்களுக்கு தரவேண்டும் போல இருந்தது.

'போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களை மீட்டெடுப்பது மிக இலகுவான காரியம் என்றும், அதற்குத் தான் மருத்துவர்கள் உள்ளார்களே என்றும் எண்ணி, உங்கள் பிள்ளைகள் விடயத்தில் அசிரத்தையாக இருந்துவிடாதீர்கள். போதைக்கு அடிமையானவர்களை அதிலிருந்து மீட்டெடுப்பதென்பது சாதாரண காரியமல்ல. போதைக்கு அடிமையானவரின் பூரண ஒத்துழைப்பு கிடைக்காத பட்சத்தில், அது வெற்றுக் கைகளால் மலையைப் பிளப்பது போன்ற காரியமாகும்' என கல்முனை பிராந்திய பாலியல் ஆரோக்கியம் மற்றும் பாலியல் தொற்று நோய்கள் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.என். முஹம்மது தில்ஷான் தெரிவித்திருக்கிறார்.

அவரது இந்தக் கருத்து, ஒரு செய்தியாக மாத்திரம் எமது வாசகர்களைக் கடந்து போய்விடக்கூடாது என்று கருகின்றேன்.

'சாதாரணமாக இளைஞர்கள் கட்டுக்கடங்காத காளைகள் என்றே வர்ணிக்கப்படும் நிலையில், போதை தலைக்கேறிய இளைஞர்களை கட்டுவதற்கு பிடிப்பதுகூட கடினமான காரியமாகும்.

அதுமட்டுமல்லாமல், போதைக்கு அடிமையாகிய ஒருவரை அதிலிருந்து மீட்டெடுப்பதற்கிடையில், பலவற்றையும் நீங்கள் இழந்திருப்பீர்கள். உங்கள் செல்வங்கள் வீணடிக்கப்பட்டிருக்கும். உங்கள் நேரம் விரயம் செய்யப்பட்டிருக்கும். உங்கள் கௌரவம் தெருவிற்கு வந்திருக்கும்.

எனவே, எமது பிள்ளைகள் விடயத்தில் மிகவும் கவனமாக இருப்பது பெற்றோராகிய எமது கடமையாகும். போதைக்கு அடிமையான பின், நமது பிள்ளைகளை அதிலிருந்து மீட்டெடுப்பதை விட, போதைப் பொருட்களின் பக்கம் செல்வதிலிருந்து எமது பிள்ளைகளைத் தடுத்து நிறுத்துவது ஓரளவு எளிதானதும், சாமர்த்தியமானதுமான காரியமாகும்.

எமது பிள்ளைகளுடன் பெற்றோராகிய நாம், எப்போதும் கனிவான வார்த்தைகளைப் பேசுவதோடு, அவர்களுடன் ஒரு சுமுகமான தொடர்பாடலைப் பேணி வரவேண்டும். அனேகமான பெற்றோர்கள் தமது பிள்ளைகளுடன் காரசாரமாகப் பேசுவதாலும், அவர்களுடன் ஒரு சுமுகமான உறவைப் பேணாமையாலும், அவர்கள் பெற்றோரோடுள்ள நெருக்கத்தைக் குறைத்து, நண்பர்களுடனான நெருக்கத்தை அதிகரித்துக் கொள்கிறார்கள்.

தவறான நடத்தையுடைய நண்பர்களே, பொதுவாக நமது பிள்ளைகளையும் தவறான நடத்தைகளின் பக்கம் இட்டுச் செல்கின்றனர்.

தினமும் நமது பிள்ளைகளுடன் ஒரு, சில நிமிடங்களையேனும் ஒதுக்கி அன்றைய நாளில் இடம்பெற்ற சம்பவங்கள், நாளைய நாளுக்கான திட்டமிடல்கள் போன்றவற்றை பரஸ்பரம் பரிமாறிக் கொள்வதற்கான சூழலை நாம் அமைத்துக் கொடுக்கவேண்டும். பிள்ளைகளது விடயங்களைக் கேட்டறிவதோடு மட்டும் நிறுத்திக் கொள்ளாமல், நமது விடயங்களையும் அவர்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டும். இதன் மூலம் பிள்ளைகளுக்கும் நமக்குமிடையில் ஒரு அந்நியோன்னியம் வளர்க்கப்படுவதோடு, வாழ்வின் முக்கிய விடயங்களை நம்முடன் அவர்கள் பகிர்ந்து கொள்வதற்கான சூழல் உருவாக்கப்படும்.

பிள்ளையின் நண்பர்வட்டம் குறித்து சரியான புரிதல் நமக்கிருக்க வேண்டும். நமது நண்பர்கள் யார் என்பதைப் பிள்ளைகள் அறிவது போன்று, நாமும் அவர்களது நண்பர்களை அறிந்து வைத்திருப்பதோடு, அந்நண்பர்களில் சிலருடனேனும் நாம் அறிமுகமாகியிருப்பதும், அவர்களைப் பற்றி அறிந்திருப்பதும் அவசியமாகும்.

தொடர்ச்சியாக பிள்ளைகளுக்கு அறிவுரை கூறுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும். தேவையான சந்தர்ப்பங்களில் மட்டும், பிள்ளைகளுக்குப் பிடித்த மொழியில் நமது கருத்துக்களை எத்திவைக்க வேண்டும். பிள்ளைகளில் ஏதேனும் நடத்தை மாற்றங்களை அவதானித்தால், அவற்றை உரிய நேரத்தில் கண்டறிந்து, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அடிக்கடி கோபப்படுவது, வீட்டிற்குத் தாமதமாய் வருவது, நேரத்திற்கு சாப்பிடாமை, அறையினுள் சென்று பூட்டிக் கொள்வது, நம்மை ஒழுங்காக முகங்கொடுத்து பேசாமலிருப்பது போன்ற நடத்தை மாற்றங்கள் உடன் கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.இவை தான் வைத்தியர் எம்.என். முஹம்மது தில்ஷான் தெரிவித் திருந்த கருத்துக்கள்.

இவற்றை வெறும் செய்தியாக கடந்துசெல்ல முடியாததால் அதனை மீண்டும் இங்கே தந்திருக்கின்றேன்.

- ஊர்க்குருவி

# யாழ்.மாநகர உறுப்பினர்கள் சபையிலிருந்து வெளிநடப்பு!

யாழ்ப்பாணம், செப். 29

யாழ்ப்பாணம் மாநகர சபையின் கழிவகற்றல் பொறி முறைக்காக யப்பான் அரசு வழங்கவிருந்த வாகனங்களிற்கான வழங்கப்பட்ட நிதியை, சபை உறுப்பினர்களுக்கு தெரியப்படுத்தாமல் திருப்பி அனுப்ப முற்பட்டதாகவும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அவமதித்ததாகவும் குறிப்பிட்டு, யாழ். மாநகரசபையின் மணிவண்ணன் அணி உறுப்பினர்களைத் தவிர ஏனைய சகல உறுப்பினர்களும் வெளிநடப்புச் செய்தனர்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் மாநகர முதல்வர் வி. மணிவண்ணன் தலைமையில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு ஜப்பானியத் தூதரகத்தினால் அன்பளிப்புச் செய்யப்படவிருந்த நவீன திண்மக் கழிவகற்றல் வாகனங்களைப் பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக அந்த திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

கழிவகற்றல் வாகன கொள்வனவு, வாகனங்களின் தீர்வை மற்றும் இதர செலவுகளுக்காக ஜப்பானியத் தூதரகத்தால் யாழ். மாநகர சபைக்கு வழங்கப்பட்ட ரூபாய் ஒரு கோடியே 43 லட்சத்து 26 ஆயிரத்து 466 ஐத் திரும்பச் செலுத்தும்படி ஜப்பானிய தூதரகம் கோரியது.

இதற்கு யாழ். மாநகர சபை முதல்வரும், ஆணையாளரும் சம்மதம் தெரிவித்து கடிதம் அனுப்பியுள்ளனர். எனினும், மாநகர சபைக்குத் தெரியப்படுத்தாமல் "பணத்தைத் திரும்பச் செலுத்த முடிவு செய்துள்ளோம்" எனச் சபை சார்பில் ஆணையாளர் அனுப்பிய கடிதம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் கேள்வியெழுப்பினர்.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு தெரியாமல் ஆணையாளர் எதேச்சையாக ஒரு கோடியே 43 இலட்சத்து 26 ஆயிரத்து 466 ரூபா தொடர்பில் முடிவெடுத்தது தவறு, ஆணையாளர் தவறை ஏற்றுக் கொள்ளவேண்டும் என வலியுறுத்தினர்.

ஆணையாளர் தவறை ஏற்கவில்லை. இந்நிலையில், ஜப்பானியத் தூதரகத்தால் அனுப்பப்பட்ட வரைவின்படியே ஆணையாளர் கடிதத்தில் கையொப்பமிட்டார் என முதல்வர் தெரிவித்தார்.

இதனைப் பரிகசித்த உறுப்பினர்கள், ஆணையாளர் யாழ்ப்பாண மாநகர சபைக்கு ஆணையாளரா? அல்லது ஜப்பானிய மாநகர சபைக்கு ஆணையாளரா? எனக் கேள்வி எழுப்பினர்.

தொடர்ந்து வாக்குவாதங்கள் இடம்பெற்றபோதும் உறுப்பினர்கள் கோரியபடி ஆணையாளர் மற்றும் முதல்வர் தவறை ஏற்றுக்கொள்ளவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆட்சிக்காலத்தில், அந்த நிதியை திறைசேரி மீளப்பெற அனுமதியளித்து கூட்டமைப்பினர் அனுப்பிய கடிதத்தை மணிவண்ணன் தரப்பினர் சுட்டிக்காட்டி, அதற்கு யாருடைய அனுமதியைப் பெற்றீர்கள் எனக் கேள்வியெழுப்பினர். இதன் போது, ஈ.பி.டி.பியினரும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்த விவகாரம் தொடர்பாக டக்ளஸ் தேவானந்தாவுக்கும் கடிதம் அனுப்பப்பட்டதாகவும், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென மணிவண்ணன் தரப்பினர் கூறியதற்கு ஈ.பி.டி.பி எதிர்ப்பு தெரிவித்தது. டக்ளஸ் தேவானந்தாவுக்கு நாளாந்தம் பல அழைப்புக்கள் வருவதாகவும், இந்த கடிதத்தை விசேடமாக அனுப்பியிருக்க வேண்டுமென்றும் தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் வெளிநடப்புச் செய்தனர். இவ்வாறு உறுப்பினர்கள் வெளியேறியதையடுத்து போதிய கோரம் இல்லாத காரணத்தினால் சபை அமர்வு ஒத்திவைக்கப்பட்டது.

மேலும், மூடுமந்திரமாக சபை நடத்தப்படுவதைக் கண்டித்தும், ஆணையாளர் சபையில் வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி யுமே உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர். (ஐ)

## இந்திய இழுவைமடி தொழிலால் வடக்கு மீனவர்களுக்கு பாதிப்பு!

### இந்திய துணை தூதருக்கு சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், செப். 28

இந்திய இழுவைமடித் தொழிலால் வடக்கு பகுதி மீனவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்னைகள் தொடர்பில் இந்திய துணை தூதுவர் ராகேஷ் நட்ராஜூக்கு தெரிவிக்கப்பட்டது. வடக்கு மாகாண கடற்றொழில் இணையப்பு இயக்கத்தினர் நேற்றுமுன்தினம் அவரை சந்தித்து பேசினர்.

இந்திய துணைத் தூதரகத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பில்,

தற்போது மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்னை தொடர்பாக இந்திய அரசாங்கத்துக்கு எடுத்துக் கூறும் விதமாக குறித்த இந்தப் பேச்சு இடம்பெற்றது. இந்திய இழுவை மடித் தொழிலால் வடக்கு பகுதி மீனவர்களான நாம் எதிர்நோக்குகின்ற பிரச்னைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. இந்த விடயம் தொடர்பாக இந்திய முதலமைச்சரை சந்தித்து கலந்துரையாடுவதற்கு அனுமதி பெற்று தருமாறு கேட்டுக் கொண்டதாக கேட்கப்பட்டதாகவும், அதற்கு துணைத் தூதுவர் சம்மதம் தெரிவித்தார் என்றும் இணையத்தின் இணைப்பாளர் அன்ரனி ஜேசுதாசன் தெரிவித்தார். (ஐ)

## போலி வீஸாவில் கனடாவுக்கு செல்ல முயன்றவர்கள் கைது!

கொழும்பு, செப். 29

போலி கனேடிய வீஸாக்களுடன் டோஹா கட்டார் வழியாக கனடாவுக்குச் செல்லத் தயாரான மூன்று நபர்கள் பண்டாரநாயக சர்வதேச விமான நிலையத்தில் குற்றவியல் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் வல்வெட்டித் துறை மற்றும் வவுனியா பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

இந்த சந்தேக நபர்கள் 38, 22 மற்றும் 41 வயது என்று குற்றவியல் விசாரணைத் துறை தெரிவித்துள்ளது. (அ)

# தம்புத்தேகம கொள்ளைச் சம்பவம் மொட்டு உறுப்பினரின் பதவி பறிப்பு!

கொழும்பு, செப். 29

தம்புத்தேகம கொள்ளைச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ராஜாங்கனை பிரதேச சபை உறுப்பினர் சுரங்க மகேஷ் சூரியாராச்சியின் கட்சி உறுப்புரிமை இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளர் நாயகம் சாகர காரியவசம் கூறினார்.

மொட்டு கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் இவ்வாறு கூறினார்.

அவருக்கு எதிரான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் பிரதேச சபை உறுப்பினர் பதவியும் பறிக்கப்படும் எனவும் அவர் அறிவித்தார். (அ)

ஈழநாடு
Eelanadu
29.09.2022 வியாழக்கிழமை
பிலவ வருடம், புரட்டாதி 12

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# தமிழ் கட்சிகள் என்ன செய்யப் போகின்றன?

ரணில் அரசாங்கம் தேசிய சபை தொடர்பில் பேசி வருகின்றது. எதிர்கட்சிகள் பலவும் இதில் இணைவது தொடர்பில் மாறுபட்ட அபிப்பிராயங்களை முன்வைத்து வருகின்றன. அரசியல் தீர்வு தொடர்பான தெளிவான நிலைப்பாடில்லாமல் இதில் இணையப் போவதில்லையென்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு அறிவித்திருக்கின்றது. கூட்டமைப்பின் நிலைப்பாடு சரியானதுதான். ஆனால் அரசியல் தீர்வை அடையும் வழிமுறை தொடர்பில் கூட்டமைப்பிடம் பதில் இல்லை. அதே போன்று, கூட்டமைப்பை தவறென்று கூறி அரசியல் செய்ய முற்படுவர்களிடமும் பதில் இல்லை.

அரசியல் தீர்வு தொடர்பில் தமிழ் தேசிய தரப்புக்களிடமுள்ள பிரதான பிரச்னை இதுதான். அரசியல் தீர்வு தொடர்பில் பேசுமளவிற்கு அதனை அடைவதற்கான தெளிவான வேலைத்திட்டங்கள் எதுவுமே தமிழ் தேசிய கட்சிகளிடம் இல்லை. உண்மையில் அவ்வாறானதொரு வேலைத்திட்டத்தை தனியாக தமிழ் தேசிய கட்சிகளால் வகுக்கவும் முடியாது. வெளித்தரப்புக்களின் ஆதரவின்றி, தமிழ் தரப்புக்களால் எதனையும் செய்துவிட முடியாது. தமிழர் விவாகரத்தில் வெளித்தரப்பு என்றால் முதலில் இந்தியாதான். இந்தியாவை தவிர்த்து வெளித்தரப்பொன்று இருக்க முடியாது. இந்தியாவிற்கு அடுத்த வெளித்தரப்பு என்றால் அமெரிக்கா. இந்த இரண்டு தரப்புக்களுமின்றி, ஈழத் தமிழர்கள் வெளித்தரப்பு பற்றி சிந்திக்க முடியாது.

ஆனால் வெளித்தரப்புகளில் முதன்மையான நாடான, இந்தியாவோ - இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலான - அதாவது, 13ஆவது திருத்தச்சட்டத்தின் அடிப்படையிலான அரசியல் தீர்வொன்று பற்றியே பேசிவருகின்றது. 13 இற்கு அப்பால் செல்வதை இந்தியா எதிர்க்கவில்லை ஆனால், இந்தியாவினால் வலியுறுத்தக் கூடிய எல்லைக் கோடு அது மட்டும் என்பதே இந்தியாவின் அணுகுமுறையாக இருக்கின்றது. இந்தியாவின் அணுகுமுறையும் சரியானதுதான். ஏனெனில் இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்கு வெளியில் சென்று பேசக் கூடிய நிலையில் இந்தியா இல்லை. மேலும், இந்தியாவின் தலையீடு தொடர்பில் மோசமான அனுபவங்கள் இந்தியாவிற்குண்டு. அமெரிக்காவை பொறுத்தவரையில் அதன் எல்லைக்கோடு மனித உரிமைகளை பாதுகாத்தல் என்பதுடன் மட்டுப்பட்டு விடுகின்றது.

இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் கரிசனைகளை புறம்தள்ளக் கூடியளவிற்கு அமெரிக்காவிற்கு இலங்கை முக்கியமான விடயமல்ல. அமெரிக்கா வெளிவிவகாரக் கொள்கையில் இலங்கை மிகவும் அரிதாகவே கருத்தில் கொள்ளப்பட்டிருப்பதாக வெளிவிவகார நோக்கர்கள் கூறுகின்றனர். இந்த பின்புலத்தில் நோக்கினால், ஈழத் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் தலையிடக்கூடிய ஒரேயொரு நாடாக இந்தியா மட்டுமே இருக்கின்றது. ஆனால் இந்தியா அதன் ஆர்வத்தின் எல்லை தொடர்பில் வெளிப்படையான நிலைப்பாட்டை கொண்டிருக்கின்றனது. ஆனால் இந்தியாவின் வெளிப்படையான அணுகுமுறையை கையாளுவது தொடார்பில் தமிழ் தேசிய தரப்புக்களின் ஒன்றுபட்ட, கருத்தொருமித்த நிலைப்பாடுகள் எவையும் இல்லை. அதே வேளை, தமிழ் தேசிய தரப்புக்களிடம் மாற்று வழிகளும் இல்லை. எதைப் பற்றி பேசினாலும் இறுதியாக வெளித்தரப்புக்களின் தலையீட்டுக்காகவே காத்திருக்கும் நிலையில்தான், ஈழத் தமிழ் மக்களின் நிலைமை இருக்கின்றது.

எனவே அரசியல் தீர்வு தொடர்பில் மக்களுக்கு நேர்மையான அணுகுமுறை ஒன்று தொடர்பில் தமிழ் தேசிய தரப்புக்கள் சிந்திக்க வேண்டும். ஒரு புதிய அரசியலமைப்பு வரும் வரையில், ஒரு இடைக்கால ஏற்பாடாக மாகாண சபைகளை உச்சபட்சமாக பயன்படுத்தும் பொறிமுறையொன்று தொடர்பில் சிந்திக்க வேண்டும். மாகாண சபையை வலுப்படுத்துவதையே ஒரு பிரதான வேலைத் திட்டமாக கொள்ள வேண்டும். 13ஆவது திருத்தச்சட்டத்தை ஒரு ஆரம்பப் புள்ளியாகக் கூட ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்றவாறான மக்கள் விரோத கருத்துக்களை பரப்பிக் கொண்டிருப்பதால், இன்றைய சூழலை ஒரு போதும் தமிழர்களால் கையாள முடியாது. இருப்பதை கொண்டுதான் சமைப்பதுதொடர்பில் சிந்திக்க வேண்டும். அவ்வாறில்லாது வெறும் கற்பனையில் பயணம் செய்தால், அது முற்றிலும் சிங்கள ஆட்சியாளர்களுக்கே பலனளிக்கும்.

இதுவரையில் இந்தியா மட்டுமே கூறிக் கொண்டிருந்ததை இப்போது ஐ.நா மனித உரிமைகள் பேரவையும் கூறுகின்றது. இதன் மூலம் அமெரிக்கா மற்றும் ஏனைய இணையனுசரனை நாடுகளும் ஒரு விடயத்தை ஆதரிக்கின்றன - அதாவது, 13ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும் - அதன் மூலம், மாகாண சபைகள் சுயாதீனமாக இயங்குவதற்கான சூழல் ஏற்படுத்தப்படவேண்டும் - அதன் மூலம் அதிகாரப் பகிர்வு நோக்கி பயணிக்க வேண்டும். இது ஒப்பீட்டடிப்படையில் தமிழ் மக்களுக்கு சாதகமான ஒரு விடயமாகும். ஆனால் தமிழ் தேசிய தரப்புக்களோ தொடர்ந்தும் இலவு காத்த கிளியாகவே இயங்கிவருகின்றன. மக்கள் நலன்சார்ந்து ஒரு உறுதியான முடிவை எடுப்பதற்கு தயக்கம் கொண்டவர்களாகவே இருக்கின்றனர். இந்த நிலைமையானது எந்த வகையிலும், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை அடைவதற்கு பயன்படப் போவதில்லை.

# விடுதலைப் போராட்டத்தின் திறப்பு தங்களிடமே தரப்பட்டதாக தமிழ்க் காங்கிரஸ் நினைத்து செயற்படுவது வேதனைக்குரியது

## பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் கருத்து



நிந்தவூர், செப். 29

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் திறப்பை, தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் தங்களிடமே தந்துவிட்டதாக அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் நினைத்துக் கொண்டு இப்படியான தியாகிகள் தினங்களில் தனித்து தியாகிகள் தினங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இது உண்மையில் வேதனைக்குரிய விடயம். தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய விடயமல்ல என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ்ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

தியாகி திலீபனின் 35ஆவது ஆண்டு நினைவையொட்டி மட்டக்களப்பு காந்திப் பூங்காவில், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இத்தனை இழப்புக்களுக்குப் பின்பும், இத்தனை ஆண்டுகளுக்குப் பின்பும் எங்களுக்குள் ஒரு ஒற்றுமையில்லை என்பதை நினைக்கும் போது உண்மையில் வேதைனையாக இருக்கின்றது. இருந்தாலும் தியாகங்கள் என்பது பல்வகைப்பட்டது. 1974ஆம் அண்டு தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்று பொன் சிவகுமாரன் தன்னுடைய உயிரைத்தியாகம் செய்ததிலிருந்து 2009 மே 18 வரை பல தியாகங்கள் தமிழர்களின் உரிமையைப் பெறுவதற்காக இந்த நாட்டிலே நிகழ்த்தப்பட்டிருக்கின்றது.

அந்த வகையில் திலீபனுடைய தியாகம் முற்றிலுமாக மாறுபட்ட ஒரு தியாகமாகத் தான் நாங்கள் பார்க்கின்றோம். ஏனென்றால், போராட்டத்தில் மோதலில், குண்டுவெடிப்பில் தன்னுடைய உயிரை எம் மக்களுக்காகத் தியாகம் செய்யாமல் உண்ணா நோன்பிருந்து அஹிம்சை வழியில், காந்திய வழியில் தன்னுடைய உயிரை ஈர்த்த ஒரேயோரு நபர் என்றுதான் நாங்கள் கூறக்கூடியதாக இருக்கும்.

உண்மையில், அவருடைய அதே காலத்தில் விடுதலைப் போராட்டத்தில் இணைந்தவன் என்ற ரீதியில் அவருடன் ஒரே இயக்கத்தில் இணைந்து பயணிக்காவிட்டாலும் சமகாலத்தில் இரு வேறு திசைகளில் பயணித்தவன் நான் என்ற வகையில் இன்று 35 வருடங்களில் முதல் முறையாக அவருக்கு அஞ்சலி செலுத்துவதில் புழகாங்கிதமடைகின்றேன். அந்தவகையில், திலீபன் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாநோன்பிருந்து 12 நாட்களில் மரணத்தைத் தழுவியிருந்தார். அந்த ஐந்து கோரிக்கைகளில் மூன்று கோரிக்கைகள் 35 வருடங்கள் கடந்த போதும் நிலுவையில், கோரிக்கைகளாகவே இருக்கின்றன. பயங்கரவாதத் தடைச்சட்டம் முற்றாக அகற்றப்படவேண்டும். இராணுவ முகாம்களிலும், சிறைகளிலுமிருக்கும் தமிழ்க் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும். மீள்குடி யேற்றம் என்ற போர்வையில் வடக்குக் கிழக்கில் சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தப் படவேண்டும் என்ற ஐந்து கோரிக்கைகளில் மூன்று இன்றும் தொடர்ச்சியாகவே இருக்கிறது.


அந்த வகையில், தமிழ் ஈழப் போராட்டத்தில் குறிப்பாக, பிரதானமாக 5 இயக்கங்கள் சமகாலத்தில் போரிட்டிருந்தாலும் அந்த இயக்கங்களுக்குள் ஒற்றுமையீனம் ஏற்பட்டது. அந்தக் கால கட்டத்தில் தங்களுக்குள் பல வகையான முரண்பாடுகளுடன் அந்த போராட்டங்கள் தங்களுக்குள்ளும் நடை பெற்றது. இருந்தாலும் தமிழர்களின் உரிமைக் குரலாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசி யல் சக்தி இருக்க வேண்டும் என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் உணர்ந்ததன் நிமிர்த்தம் 2001 இல் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு உருவாகியது. வடக்கு- கிழக்கில் தமழ் மக்களின் பெரும் பிரதிநிதியாக இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருந்து கொண்டிருக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து இன்று ஒரு சில கட்சிகள் பிரிந்து சென்றிருந்தாலும் தனித்துவமாக நடந்துகொண்டிருந்தாலும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் திறப்பை, தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் தங்களிடமே தந்துவிட்டதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கே தந்துவிட்டதாக, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்று கூற முடியாது அந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கே மணிவண்ணன் தரப்பினரும், கஜேந்திரகுமாரும் உரிமை கோருகிறார்கள். எனவே அகில இலங்கை தமிழ்க் காங்கிரசிடமே பிரபாகரன் அவர்கள் விடுதலைப் போராட்டத்தின் திறப்பைத் தந்து விட்டுச் சென்றிருப்பதாக தாங்கள் நினைத்துக் கொண்டு இப்படியான தியாகிகள் தினங்களில் தனித்து தியாகிகள் தினத்தை, இங்கு மாத்திரமல்ல, யாழ்ப்பாணத்தில்கூட செய்து கொண்டிருக்கிறார்கள். இது உண்மையில் வேதனைக்குரிய விடயம். தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய விடயமல்ல.

நாங்கள் இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த இடத்தில் திலீபனை நினைவு கூர்ந்தாலும் இன்றைய சூழலில் பெருமளவான மக்கள் அவரை நினைத்து அஞ்சலி செலுத்துவதற்கு மனமிருந்தாலும், இலங்கை அரசியன் புலனாய்வுப்பிரிவினரின் கெடுபிடிகளுக்குப் பயந்து, அதாவது விசாரணைகளுக்கு அழைப்பதைத் தவிர்த்துக் கொள்ளும் முகமாக இப்படியான நிகழ்வுகளை தவிர்த்துக் கொண்டு வருகிறார்கள். அந்த நிலை நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதனால், இன்று சற்றுக் குறைந்திருக்கிறது. இது எதிர்காலத்தில் எப்படியிருக்கும் என்று கூறமுடியாது. - என்றார்.

(அ-06)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



செப்ரெம்பர் - 29 வியாழக்கிழமை
சுபகிருது வருடம் - புரட்டாதி 12
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 1.30 - 03.00
திதி : சதுர்த்தி

## இன்றைய ராசிபலன்

**மேடம்**
திட்டமிட்டிருந்த செயல்களை நினைத்தபடி செய்து முடிப்பீர்கள். நண்பர் ஆதரவுடன் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். வரவு அதிகரிக்கும். தொழிலில் ஏற்பட்ட சங்கடம் விலகும்.

**இடபம்**
எதிர்ப்பை சரிசெய்து உங்கள் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். விஐபிகள் உதவியுடன் எண்ணத்தை நிறைவேற்றி ஆதாயம் அடைவீர்கள். எதிரிகள் பணிவார்கள். தடைபட்ட வருவாய் வந்து சேரும்.

**மிதுனம்**
குடும்பத் தேவையை நிறைவேற்றுவீர்கள். முயற்சி வெற்றியாகும். லாபம் கூடும். எதிர்பாராத வருவாய் ஏற்படும். நீண்டநாள் எண்ணம் நிறைவேறும். இழுபறியாக இருந்த ஒரு முயற்சி இன்று நடந்தேறும்.

**கடகம்**
அலைச்சல் அதிகரித்தாலும் உங்கள் விருப்பம் இன்று நிறைவேறும். மாற்று இனத்தவர் உதவியுடன் தொழிலை விரிவுசெய்வீர்கள். பொன் பொருள் சேரும். விழிப்புடன் செயல்படுவதால் நன்மை அதிகரிக்கும்.

**சிம்மம்**
அதிகாரிகள் ஆதரவுடன் பணியில் நீங்கள் விரும்பிய மாற்றத்தை அடைவீர்கள். பணவரவு திருப்தி தரும். விரும்பிய பொருட்களை வாங்குவீர்கள். தடைகளைத் தாண்டி முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.

**கன்னி**
கருத்து வேறுபாட்டால் விலகியவர்கள் உங்களைத் தேடி வருவர். திட்டமிட்ட செயல் நிறைவேறும். வருமானத்தில் ஏற்பட்ட தடை விலகும். தம்பதியர் ஒற்றுமை உண்டாகும். எண்ணம் நிறைவேறும்.

**துலாம்**
வெளியூர் பயணம் வெற்றி தரும். ஆதாயம் காண்பீர்கள். பணியாளர்கள் வேறு இடத்திற்கு மாறுதல் கேட்பீர்கள். அலைச்சல், செலவு அதிகரிக்கும் என்றாலும் முயற்சியில் ஆதாயம் உண்டாகும்.

**விருட்சிகம்**
மனம் மகிழும்படியான சம்பவம் நடைபெறும். குல தெய்வ அருளால் எண்ணம் நிறைவேறும். குடும்பத் தேவை அறிந்து செயல்படுவீர்கள் குழப்பத்திற்கு இடம் தராமல் செயல்படவேண்டிய நாள். முயற்சி நன்மையாகும்.

**தனுசு**
வியாபார முன்னேற்றம் கருதி எடுக்கும் முயற்சி லாபமாகும். வருவாய் கூடும். நிதி நெருக்கடி விலகும். எதிர்பார்த்த பணம் இன்று வந்து சேரும். நீண்ட நாள் எண்ணம் நிறைவேறும். பொன் பொருள் சேரும்.

**மகரம்**
மேற்கொள்ளும் முயற்சி வெற்றியாகும். பகைவர்கள் விலகிச் செல்வர். பொறாமையாளர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு விமர்சனம் செய்தாலும் பொருட்படுத்தாதீர். ஆரோக்கியம் சீராகும்.

**கும்பம்**
இரண்டு நாளாக இருந்த நெருக்கடி விலகும். எதிர்பார்த்த பணம் வரும். புதிய முயற்சிகள் நன்மையாகும். உடல்நிலையில் கவனம் தேவை. குடும்பத்தினர் ஆதரவுடன் சொத்து வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள்.

**மீனம்**
செயலில் சங்கடத்தை சந்திப்பீர்கள். சந்திராஷ்டமம் என்பதால் அமைதியைக் கடைபிடியுங்கள். கடவுளை நம்பி செயல்பட வேண்டிய நாள். மேலதிகாரியின் கோபத்திற்கு ஆளாகலாம்.

# தமிழ்நாட்டில் 73 லட்சம் பேர் வேலைவாய்ப்புக்காக பதிவு

சென்னை, செப். 29

தமிழகத்தில் படிப்பு முடித்து வெளியேறுபவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து வருகின்றனர்.

அவ்வாறு பதிவு செய்தோர், ஒவ்வொரு காலக்கட்டத்திலும், தங்களுடைய வேலை வாய்ப்பு பதிவை புதுப்பித்தும் வருகின்றனர். குறிப்பாக 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை பதிவை புதுப்பிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் 2 மாதங்கள் சலுகைகள் வழங்கப்படுகிறது.

இந்த நிலையில், தற்போது வேலைவாய்ப்பு அலுவலகத்தில் மொத்தம் எத்தனை பேர் பதிவு செய்துள்ளனர் என்பது குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளது.

இது தொடர்பாக கடந்த ஒகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி நிலவரப்படி, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்த பதிவுதாரர்கள் பற்றிய விவரங்கள் வெளியாகி உள்ளது. அதனடிப்படையில், 18 வயதுக்கு உட்பட்ட பள்ளி மாணவர்கள் 23 லட்சத்து ஆயிரத்து 800 பேரும், அதேபோல் 19 முதல் 30 வயது வரை உள்ள பல தரப்பட்ட கல்லூரி மாணவர்களை பொறுத்த வரையில் 29 லட்சத்து 88 ஆயிரத்து 1 பேரும் பதிவு செய்து உள்ளனர்.

31 முதல் 45 வயது வரை அரசுப்பணி வேண்டி பதிவு செய்து காத்திருப்பவர்கள் எண்ணிக்கை 18 லட்சத்து 68 ஆயிரத்து 931 பேர் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 46 முதல் 60 வயது வரை வயது முதிர்வு பெற்ற பதிவுதாரர்கள் 2 லட்சத்து 35 ஆயிரத்து 190 பேரும், 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் 5 ஆயிரத்து 590 பேர் பதிவு செய்து வேலைக்காக காத்து இருக்கின்றனர்.

அதேபோல், பட்டதாரி ஆசிரியர்கள் 3 லட்சத்து 49 ஆயிரத்து 704 பேரும், முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் 2 லட்சத்து 60 ஆயிரத்து 938 நபர்கள் என மொத்தம் 73 லட்சத்து 99 ஆயிரத்து 512 நபர்கள் பதிவு செய்து காத்திருப்பதாக வேலை வாய்ப்பு மற்றும் பதிவுத்துறை அறிவித்துள்ளது. (அ)

# சென்னை சிறுமிக்கு பாலியல் துன்புறுத்தல்: உறவினர்களில் 8 பேருக்கு வாழ்நாள் சிறை!

சென்னை, செப். 29

சென்னையில் 15 வயது சிறுமிக்கு பாலியல் துன்புறுத்தல் அளித்த வழக்கில் குற்றவாளிகள் என அறிவிக்கப்பட்ட காவல் ஆய்வாளர் உட்பட 13 பேருக்கு 20 ஆண்டுகள் சிறை தண்டனையும், சிறுமியின் உறவினர்கள் 8 பேருக்கு வாழ்நாள் சிறை தண்டனையும் விதித்து சென்னை போக்சோ சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

சென்னை வண்ணாரப்பேட்டையை சேர்ந்த 15 வயது சிறுமி தனக்கு நடந்த தொடர் பாலியல் துன்புறுத்தல்கள் குறித்து வண்ணாரப்பேட்டை மகளிர் காவல் நிலையத்தில் கடந்த 2020 ஆம் ஆண்டு புகார் கொடுத்தார். இதையடுத்து, சிறுமிக்கு பாலியல் ரீதியாக துன்புறுத்தல் அளித்ததாகவும், அதற்கு உடந்தையாக இருந்ததாகவும் மதன்குமார், சாயிதாபானு, சந்தியா, செல்வி, கார்த்திக், மகேஸ்வரி, வனிதா, விஜயா, அனிதா என்ற கஸ்தூரி, மாரி, பாஷா, முத்துபாண்டி, மீனா, ராஜேந்திரன், காவல் ஆய்வாளர் புகழேந்தி, காமேஸ்வர ராவ், முகமது அசாருதீன், பசுலுதீன், வினோபாஜி, கிரிதரன், ராஜாசுந்தர், மாரீஸ்வரன், நாகராஜ், பொன்ராஜ், வெங்கட்ராம் என்ற அஜய், கண்ணன் ஆகிய 26 பேர் மீது பொலிஸார் வழக்கு பதிவு செய்தனர். இதில் மாரி, பாஷா, முத்துபாண்டி, மீனா ஆகியோர் தலைமறைவாக உள்ளனர். விசாரணை காலத்தில் மாரீஸ்வரன் உயிரிழந்துவிட்டார்.

மற்ற 21 பேர் மீதான வழக்கு விசாரணை, சென்னை போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் நீதிபதி எம்.ராஜலட்சுமி முன்பு நடந்தது. அரசு தரப்பில் சிறப்பு வழக்கறிஞர் டி.ஜி.கவிதா ஆஜராகி வாதிட்டார். குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் பல வழக்கறிஞர்கள் ஆஜராகி வாதிட்டனர். இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, “இந்த வழக்கில் அரசுத் தரப்பில் குற்றச்சாட்டு சரிவர நிரூபிக்கப்பட்டுள்ளது. குற்றம்சாட்டப்பட்ட காவல் ஆய்வாளர் புகழேந்தி, 7 பெண்கள் உட்பட 21 பேரும் குற்றவாளிகள்” என்று கடந்த செப்.15ஆம் திகதி தீர்ப்பளித்தார்.

இந்நிலையில், இந்த வழக்கில் தண்டனை விவரங்களை நீதிபதி நேற்று முன் தினம் அறிவித்தார். இதற்காக, சிறையில் அடைக்கப்பட்டிருந்த 21 பேரும் பலத்த பாதுகாப்புடன் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டு ஆஜர்படுத்தப்பட்டனர்.

நீதிபதி எம்.ராஜலட்சுமி பிறப்பித்த தீர்ப்பில் கூறியதாவது:

பாதிக்கப்பட்ட சிறுமியின் உறவினர்களான மதன்குமார், சாயிதாபானு, சந்தியா, செல்வி, கார்த்திக், மகேஸ்வரி, வனிதா, விஜயா ஆகிய 8 பேருக்கும் வாழ்நாள் சிறை தண்டனை விதிக்கப்படுகிறது. காவல் ஆய்வாளர் புகழேந்தி உள்ளிட்ட 13 பேருக்கும் 20 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்படுகிறது. 21 பேருக்கும் மொத்தம் ரூ.7 லட்சம் அபராதம் விதிக்கப்படுகிறது. இதில், காவல் ஆய்வாளர் புகழேந்திக்கு மட்டும் ரூ.1.25 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. மொத்த அபராதத் தொகையும், தமிழக அரசு தரப்பில் ரூ.5 லட்சமும் சேர்த்து, பாதிக்கப்பட்ட சிறுமிக்கு வழங்கவேண்டும். இவ்வாறு நீதிபதி தீர்ப்பளித்தார். இதையடுத்து, குற்றவாளிகள் அனைவரும் புழல் சிறைக்கு கொண்டு செல்லப்பட்டனர். (அ)

# தமிழகத்தில் 14 லட்சம் பேருக்கு அரசால் நகைக்கடன் தள்ளுபடி!

சென்னை, செப். 29

தமிழகத்தில் தற்போது வரை 5 லட்சத்து 22 ஆயிரத்து 514 விவசாயிகளுக்கு, 3 ஆயிரத்து 969 கோடி ரூபாய் பயிர் கடன் வழங்கப்பட்டுள்ளது. கூட்டுறவு வங்கிகளில் 14 லட்சம் பேருக்கு நகை கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

5 சவரன் வரை நகைக்கடன் பெற்று தற்போது வரை ஒரு லட்சம் பேர் நகை கடனுக்கான உறுதிமொழி பத்திரம் கொடுக்கவில்லை. எனவே அவர்களுக்கு நகை கடன் தள்ளுபடி செய்ய முடியாத நிலை உள்ளது. உறுதிமொழி பத்திரம் கொடுத்தால் அவர்களுக்கும் நகை கடன் தள்ளுபடி செய்யப்படும்.

சென்னை அண்ணாநகர், திருமங்கலம், தியாகராயநகர் உள்ளிட்ட 10 ரேஷன் கடைகள், கூட்டுறவு மருந்தகங்களில் கூகுள் பே மூலம் பணம் செலுத்தி பொருட்களை பெரும் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன.

வடகிழக்கு பருவ மழையால் காய்கறி விலை உயர்வு ஏற்பட்டால், பசுமை பண்ணை காய்கறி கடைகளில் குறைந்த விலைக்கு காய்கறிகளை விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (அ)

# எந்தத் தேர்தல் நடந்தாலும் எதிர்கொள்ள நாம் தயார்!

## கூறுகிறார் சஜித் பிரேமதாஸ

**கொழும்பு, செப். 29**

**“நாட்டில் அடுத்து எந்த தேர்தல் நடத்தப்பட்டாலும் அதனை எதிர்கொள்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவே இருக்கின்றது.” - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**



“எமது நாட்டு மக்கள் ஜனாதிபதி (கோட்டா), பிரதமர் (மஹிந்த) ஆகியோரை விரட்டினர். காகத்தைக்கூட (பஸில்) விரட்டியடித்தனர். எனவே, தற்போது அமைந்துள்ள அரசாங்கமானது, மக்கள் ஆணைக்கு முரணானது.” - எனவும் சஜித் சுட்டிக்காட்டினார்.

மக்களுக்கு அஞ்சுவதால் தான், தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கம் நடுங்குகின்றது எனவும், பயங்கரவாத தடைச்சட்டம் உள்ளிட்ட சட்டங்களை பயன்படுத்தி மக்களை ஒடுக்குவதற்கு முயற்சிக்கின்றது எனவும் அவர் குற்றஞ்சாட்டினார். அத்துடன், ‘காகம் - யானை’ கூட்டணியே தற் போது நாட்டை ஆள்கின்றது. அதாவது, காகத்துக்கும் (மொட்டு கட்சி), யானைக்கும் (ஐக்கிய தேசியக் கட்சி) அரசியல் ரீதியில் திருமணம் முடிந்துவிட்டது.” - எனவும் சஜித் சாடினார். (அ)

# ஆறு மாதங்களுக்குள் உள்ளூராட்சி தேர்தல்

## உதய கம்மன்பில வலியுறுத்து

கொழும்பு, செப். 29

“2023 மார்ச் மாதம் கட்டாயம் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.” - என்று பிவிருது ஹெல உறுமய கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில வலியுறுத்தினார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

“உள்ளூராட்சி சபைகளின் பதவி காலம் ஓராண்டுக்கு நீடிக்கப்பட்டது. எதிர்வரும் மார்ச் மாதத்துடன் அந்த காலப்பகுதி நிறைவடைகின்றது. எனவே, மார்ச் மாதத்துக்கு பிறகு தேர்தல் நடத்தப்படவேண்டும். அதற்கு முன்னர் நடைபெற்றாலும் பரவாயில்லை. அப்போதுதான் மக்களின் ஆணை யாருக்குள்ளது என்பது தெரியவரும்.” - எனவும் கம்மன்பில குறிப்பிட்டார். (அ)

# கெஹெலியவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்

கொழும்பு, செப். 29

அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல உள்ளிட்ட இருவருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அரசாங்கத்திற்கு நட்டத்தை ஏற்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டு, இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று இந்த குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர், அமைச்சர் உள்ளிட்ட ஏனைய பிரதிவாதிகளையும் பிணையில் விடுவிக்க கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அத்துடன், இந்த வழக்கை நவம்பர் 03ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ)

# கஜிமாவத்தை தீ விபத்து காரணமாக பாதிப்புற்றோருக்கு உடனடி உதவிகள்

## ஜப்பானிலிருந்து ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, செப். 29

கொழும்பு, பாலத்துறை, கஜீமாவத்தை அடுக்குமாடி குடியிருப்பில் ஏற்பட்ட பாரிய தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான அனைத்து நிவாரணங்களை யும் உடனடியாக வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

ஜப்பானுக்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி, தீ விபத்துச் சம்பவம் குறித்து அறிந்துகொண்ட நிலையில்,, பாதிக்கப்பட்ட மக்களுக்கான தேவைகளை உடனடியாக பூர்த்தி செய்யுமாறு ஜனாதிபதியின் செயலாளருக்கு உத்தர விட்டுள்ளார்.

கொழும்பு அரசாங்க அதிபர், நகர அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் மற்றும் முப்படைத் தளபதிகள், தீயணைக்குப் பிரிவினர், சுகாதார அதிகாரிகள், உள்ளிட்ட அனைத்து அரசாங்கத் தரப்பினரையும் தொடர்புகொண்டு, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான தேவைகளை இன்றிரவு முதலே பூர்த்தி செய்யுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

குறிப்பாக தீ விபத்தினால் பாதிக்கப்பட்டுள்ள தாய்மார், பெண்கள், பிள்ளைகள் உள்ளிட்டோருக்கான தேவைகளுக்கு முன்னுரிமை வழங்குமாறும் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் உத்தரவிற்கமைய, பாதிக்கப்பட்ட குடும்பங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான பணிகளை ஜனாதிபதியின் செயலாளர் உடனடியாக ஆரம்பித்துள்ளார். (அ)

# மற்றொரு முக்கிய புள்ளி டலஸ் அணியில் இணைவு!

கொழும்பு, செப். 29

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் தேசிய லொத்தர் சபை ஆகியவற்றின் முன்னாள் தலைரான சட்டத்தரணி லலித் பியூம் பெரேரா டலஸ், ‘சுதந்திர மக்கள் சபை’யுடன் சங்கமித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் பாராளுமன்றத்தில் சுயாதீனமாக டலஸ் அழகப்பெரும உள்ளடங்கலான 13 எம்.பிக்கள் இணைந்தே ‘சுதந்திர மக்கள் சபை’யை நிறுவியுள்ளனர்.

இந்நிலையிலேயே அவர் நேற்று முன் தினம் மேற்படி சபையுடன் இணைந்துள்ளார்.

இதற்கான நிகழ்வில் டலஸ் அழகப்பெரும, பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், சன்ன ஜயசுமன உள்ளிட்டவர்கள் பங்கேற்றனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவு வழங்கிவந்த முக்கிய புள்ளிகள் அண்மைக் காலமாக டலஸ் தரப்புடன் இணைந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# மேலதிக வகுப்புக்கு சென்ற மாணவனை கொடூரமாக தாக்கிய அமைச்சரின் மகன்!

கொழும்பு, செப். 29

அமைச்சரின் மகன் என கூறிக்கொண்டு டிபெண்டர் வாகனத்தில் வந்த இளைஞன் உள்ளிட்ட குழுவினர், கிரிபத்கொடையில் உள்ள பிரபல மேலதிக வகுப்புக்கு முன்பாக மாணவன் ஒருவரை கொடூரமாக தாக்கியுள்ளனர்.

சுமார் 20 பேர் கொண்ட கும்பல் மாணவனை இரத்தம் வரும் வரை தாக்கியதாக கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

தாக்குதல் நடத்தியவர்களைத் தவிர, கறுப்பு உடை அணிந்த மெய்ப்பாதுகாவலர்கள் குழு டிபெண்டர் வாகனங்களில் வந்து அருகில் இருந்ததாகவும் கிராம மக்கள் தெரிவித்தனர்.

அமைச்சரின் மகன் எனக் கூறிய இளைஞன், அந்த பயிற்சி வகுப்பில் உள்ள தனது காதலிக்கு, மேற்படி இளைஞன் காதல் கடிதம் கொடுத்தாக தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில், கடுமையாகத் தாக்கப்படும் இளைஞன் தொடர்பில் பொலிஸ் அவசர சிகிச்சைப் பிரிவுக்கும், கிரிபத்கொடை பொலிஸாருக்கும் அறிவித்துள்ளதாக தெரியவந்துள்ளது. கிரிபத்கொடை பொலிஸ் நிலையத்தில் இருந்து சுமார் 50 மீற்றர் தூரத்தில் இந்த மேலதிக வகுப்பு அமைந்துள்ளது.

வாகனங்களில் பயணித்தவர்கள் கூட வாகனங்களை நிறுத்திவிட்டு தாக்குதலை வேடிக்கை பார்த்துள்ளனர். ஆனால் யாரும் தடுக்க முயலவில்லை. அதைத் தடுக்கச் சென்ற இருவரை மெய்ப்பாதுகாவலர்கள் தாக்கியதே அதற்குக் காரணமெனவும் கூறப்படுகிறது.

அங்கிருந்த ஒருவர் தாக்குதலை தடுக்க முயன்றபோது, அமைச்சரின் மகன் கும்பலிடம் இருந்து தப்பிய அந்த மாணவன் வகுப்பறைக்குள் நுழைந்துள்ளார். பின்னர், அந்த கும்பல் வகுப்புக்குள் புகுந்து மாணவனை மீண்டும் தாக்கியுள்ளனர்.

கடைசி நேரத்தில் கைத்துப்பாக்கிகளுடன் சிவில் உடையில் பொலிஸ் அதிகாரிகள் 7 பேர் அங்கு வந்தபோது, தாக்குதல் நடத்தியவர்கள் தப்பி ஓடிவிட்டனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த மாணவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள தாகவும், தாக்குதல் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதி பொலிஸ் மா அதிபர் ரொஹான் பிரேமரத்ன கூறி யுள்ளார்.

களனியை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர் ஒருவரின் மகன் இங்கு இருந்தமை அடையாளம் காணப்பட்டுள்ளது. (அ)

# பாராளுமன்ற ஊழியர்களும் 60 வயதில் ஓய்வு கட்டாயம்!

கொழும்பு, செப். 29

பாராளுமன்ற தலைமைச் செயலகத்தில் பணிபுரிந்து 60 வயதை கடந்தவர்களுக்கு டிசெம்பர் 31ஆம் திகதிக்குள் ஓய்வு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்நிலையில், பாராளுமன்ற பொதுச் செயலாளர் ஊழியர்களின் குறைந்தபட்ச ஓய்வு வயதெல்லையை 65 ஆக நீடிக்க அண்மையில் முயற்சிகளை மேற்கொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் அரசாங்கம் குறைந்தபட்ச ஓய்வூதிய வயதை 60 ஆக குறைத்துள்ள நிலையில், அந்த ஊழியர்களும் 60 வயதில் ஓய்வு பெற வேண்டியது அவசியமாகும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, தற்போது பணிபுரியும் 60 வயதுக்கு மேற்பட்ட ஊழியர்கள் டிசெம்பர் 31ஆம் திகதி அல்லது அதற்கு முன் ஓய்வு பெறலாம்.

60 வயதை பூர்த்தி செய்த ஊழியர்களின் ஓய்வுக்கு தேவையான கடித கோப்புகளை தயாரிப்பதற்கு தேவையான ஆவணங்களை நிறுவன பணியகத்திற்கு வழங்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தின் தலைமைச் செயலக ஊழியர்கள் 50 வயதை கடந்திருந்து 60 வயதுக்கு முன்னதாக ஓய்வு பெற விரும்பினால், ஓய்வு பெறும் திகதியிலிருந்து 06 மாதங்களுக்கு முன்னதாக எழுத்துமூலமாக அறிவித்து சபாநாயகரிடம் ஒப்புதல் பெறவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# இனப்படுகொலை நடக்கவில்லை உள்ளக விசாரணை நடத்தலாம்!

### கூறுகின்றார் சரத் பொன்சேகா

கொழும்பு, செப். 29

**''நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள நிலையில், அதனை ஓர் வாய்ப்பாக பயன்படுத்தி அரசாங்கத்தை பணயக் கைதியாக்குவதற்கு விக்னேஸ்வரன் உள்ளிட்ட தரப்பினர் முயற்சிக்கின்றனர். இது ஏற்புடைய நடவடிக்கை அல்ல. பிரிவினைவாத நிபந்தனைகளை ஏற்கக்கூடாது''**

-இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

புலம்பெயர் தமிழர்கள் இலங்கையில் முதலிடுவதற்கு தயாராகவே உள்ளனர், அது நடக்க வேண்டுமானால் சில நிபந்தனைகளை நிறைவேற்றப்படவேண்டும் என தமிழ்க் கட்சிகளால் விடுக்கப்பட்டுள்ள அறிவிப்பு தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே பொன்சேகா இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஸ்ரீலங்கா டயஸ்போரா என்பதற்குள் தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் என அனைத்து இனத்தவர்களும் உள்ளனர். இந்த அரசாங்கம் மீது அவர்களுக்கு நம்பிக்கை இருந்தால் முதலீடுகளை மேற்கொள்ளலாம். ஆனால் ஊழல் ஆட்சியெனில் எவரும் முன்வரமாட்டார்கள் என்ப



தையும் ஏற்றாக வேண்டும். இந்த அரசாங்கம்மீது நம்பிக்கையின்மையால் முதலிட எவரும் முன்வர விரும்புவதில்லை. சாதாரணமாககூட பணம் அனுப்பமாட்டார்கள்.

தற்போதைய நெருக்கடி சூழ்நிலையில், குழம்பிய குட்டையில் மீன்பிடிப்பதற்கு விக்னேஸ்வரன் முயற்சிக்கின்றார். அரசாங்கத்தை பணயக் கைதியாக பயன்படுத்துவதற்கு முற்படுகின்றார். பிரிவினைவாத நிபந்தனைகளை ஏற்கமுடியாது. பெரும்பாலான மக்கள் எதிர்க்கும் அரசியல் காரணிகளையும் அனுமதிக்க முடியாது.

இது விடயத்தில் நிதிக்காக அரசாங்கமும் அடிபணிந்து விடக்கூடாது.

அதேவேளை, இராணுவ குறைப்பு செய்யப்படவேண்டும் என்ற ஜெனிவா யோசனையும் ஏற்புடைய விடயம் அல்ல. அதனை ஏற்க முடியாது. இராணுவ பலத்தை எண்ணிக்கையும் மதிப்பிடக்கூடாது. இராணுவத்துக்கு ஒதுக்கப்படும் நிதியை வைத்துதான் கணக்கிடவேண்டும். இலங்கை இராணுவம் இன்னமும் தொழில்நுட்பம் ரீதியில் மேம்படவில்லை. எனவே, படைகுறைப்பு யோசனை ஏற்புடையது அல்ல.

இலங்கையில் இனப்படுகொலை நடக்கவில்லை. 40 ஆயிரம் பேர் கொல்லப்படவும் இல்லை. ஓரிரு சம்பவங்கள் இடம்பெற்றிருக்கலாம். அது தொடர்பில் உள்ளக விசாரணை நடத்தலாம். இதனை போர் முடிந்த கையோடு செய்யாததாலேயே பிரச்சினை ஏற்பட்டது-என்றார். (அ)

## வீடுகளை டொலர்களுக்கு விற்பனை செய்ய ஏற்பாடு

கொழும்பு, செப். 29

நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான வீடுகளை டொலர்களுக்கு விற்பனை செய்யும் அரசாங்க வேலைத்திட்டத்தின் கீழ் முதலாவது வீடு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

டொலரில் வாங்குபவர்களுக்கு 10 சதவீதம் தள்ளுபடி வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றன.

டுபாயில் பணிபுரியும் இலங்கையர் ஒருவர், நகர அபிவிருத்தி அதிகார சபையின் வியத்புர வீடமைப்புத் தொகுதியிலிருந்து நேற்று முன் தினம் குறித்த வீட்டை கொள்வனவு செய்துள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. குறித்த வீட்டுக்காக அவர் 40,000 டொலர்களை செலுத்தியதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ)

## பட்டினி, மருந்து தட்டுப்பாட்டால் மக்கள் போராட்டம் வெடிக்கும்!

### எச்சரிக்கிறார் உதய கம்மன்பில

கொழும்பு, செப். 29

“பட்டினி மற்றும் மருந்துத் தட்டுப்பாட்டால் மக்கள் போராட்டம் வெடிக்கும் பட்சத்தில், அது பயங்கரமான போராட்டமாக அமையும் என்ற எச்சரிக்கையை அரசுக்கு விடுக்கின்றோம்.”

- இவ்வாறு புதிய ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில எம்.பி. தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

“உணவு மற்றும் மருந்துகளுக்கு எதிர்காலத்தில் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய சூழ்நிலை காணப்படுகின்றது.

வைத்தியசாலையில் மருந்துத் தட்டுப்பாடு நிலவுவதாக வைத்தியர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

அதேபோல் உண்ண உணவில்லாததால் மாணவர்கள் பாடசாலைகளில் மயங்கி விழுகின்றனர் என்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றர்.

தமது பிள்ளைகளுக்கு சமைத்துக் கொடுக்க வீட்டிலே ஒன்றும் இல்லை என்று தாய்மார் கண்ணீர் வடிக்கின்றனர்.

எனவே, இந்நிலைமையை மறைப்பதற்கு எவர் முற்பட்டாலும், உணவு மற்றும் மருந்துக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்பது கசப்பான உண்மையாகும்.

எரிபொருள் மற்றும் எரிவாயுவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதால்தான் கடந்த ஏப்ரலில் மக்கள் போராட்டம் ஆரம்பமானது.

உணவு மற்றும் மருந்துகளில்தான் மனித இருப்பு தங்கியுள்ளது. இவை இல்லாவிட்டால் மனிதன் வாழ முடியாத நிலை உள்ளது.

மருந்து இல்லாமல் பெற்றோர் உயிரிழந்தால் பிள்ளைகள் கொதிப்படைவார்கள். உணவு இல்லாமல் குழந்தைகள் உயிரிழந்தால் பெற்றோர் கொதிப்படைடவார்கள். அந்தப் போராட்டங்கள் பயங்கரமானவையாக இருக்கும்.

அதேபோல் நாடு அராஜாக நிலைமைக்கும் செல்லும். இருப்பவர்களின் வீடுகள் சுற்றிவளைக்கப்படலாம்.

கொள்ளை அடிக்கப்படலாம். கடைகள் உடைக்கப்படலாம். எனவே, அரசு, மக்களை ஒடுக்க வழி தேடாமல், பிரச்னைகளுக்குத் தீர்வு தேட வேண்டும்-என்றார். (அ)

## தென் கொரியா, ஜப்பானில் தொழில் பெற்றுத் தருவதாக கூறி பண மோசடி

கொழும்பு, செப். 29

தென் கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளில் வேலை வாய்ப்புக்களை பெற்றுத் தருவதாக கூறிப் பண மோசடியில் ஈடுபட்ட இரண்டு நபர்களை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசேட விசாரணை பிரிவு கைது செய்துள்ளது.

இளைஞர், யுவதிகளை தென் கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு வேலை வாய்ப்புகளுக்காக அனுப்புவதாக தெரிவித்து, குருநாகல் நகரின் பிரதான இடமொன்றில் இந்த நபர்கள் பண சேகரிப்பில் ஈடுபட்டிருந்த சந்தர்ப்பத்திலேயே கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக் காரவிற்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக் கப்பட்டுள்ளது.

தென் கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு செல்வதற்காக நபரொருவரிடமிருந்து முற்பணமாக 1500 ரூபாவை இந்த நபர்கள் அறவிட்டு வந்துள்ளனர்.

இதன்படி, குறித்த இடத்திலிருந்து 77000 ரூபா பணம் மற்றும் மேலும் சில பொருட்களையும் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் குருநாகல் நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதை அடுத்து, இரண்டு லட்சம் ரூபா வீதமான சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (அ)

## திலீபனை நினைவு கூர்ந்தவர்களை உடனடியாக கைது செய்யவேண்டும்

### வலியுறுத்துகின்றார் விமல் வீரவன்ஸ

கொழும்பு, செப். 29

“மரணித்த புலிப் பயங்கரவாதியான திலீபனை வடக்கு, கிழக்கில் பகிரங்கமாக நினைவேந்தியவர்களை உடனடியாகச் கைதுசெய்து சிறையில் அடைக்க வேண்டும்.”

-இவ்வாறு அரசிடம் வலியுறுத்தியுள்ளார் முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழீழ விடுதலைப்புலிகள் இந்த நாட்டில் தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பு ஆகும்.

இந்த அமைப்பில் இருந்து மரணித்தவர்களை யாராவது பகிரங்கமாக நினைவுகூர்ந்தால் அவர்களைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும்.

மரணித்த புலிப் பயங்கரவாதியான திலீபனை வடக்கு-கிழக்கில் 12 நாட்கள் தமிழ் மக்கள் பகிரங்கமாக நினைவேந்தியுள்ளார்கள். திலீபனின் படத்தைத் தாங்கிய ஊர்திப் பவனிகளும் வீதிகளில் வலம் வந்துள்ளன.

சிங்கள மக்களைச் சினமூட்டும் வகையில் தமிழ் மக்களும், தமிழ் அரசியவாதிகளும் நடந்துகொண்டுள்ளார்கள்.

சமூக வலைத்தளங்களில் கூட திலீபனைத் தமிழ் இளைஞர்கள் நினைவேந்தியுள்ளார்கள்.

இவ்வாறானவர்களை அடையாளம் கண்டு அவர்களைக் கைதுசெய்து சிறையில் அடைக்கவேண்டும்.

பாதுகாப்பு அமைச்சு இந்த விடயத்தில் மிகவும் அக்கறையுடன் செயற்பட வேண்டும்.

திலீபனின் நினைவேந்தல் நிகழ்வைப் பொலிஸாரும், படையினரும் ஏன் தடுக்காமல் இருந்தார்கள்?

எவரின் உத்தரவின் பேரில் பொலிஸாரும் படையினரும் அமைதி காத்தார்கள்?-என்றார். (அ)

## முட்டை அப்பம் விலை உயர்வு: தொழிலை இழந்தனர் 5,000 பேர்

கொழும்பு, செப். 29

நாடளாவிய ரீதியில் அப்பம் மற்றும் முட்டை அப்பம் நுகர்வோர்களின் எண்ணிக்கை 50 வீதத்தால் குறைந்துள்ளதாக சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

தற்போதைய பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டு, நுகர்வோர் அப்பங்களை வாங்குவதைக் தவிர்த்துள்ளனர்.

நாடளாவிய ரீதியில் 5000க்கும் மேற்பட்ட அப்பம் தயாரிப்பாளர்கள் வேலை இல்லாமல் திண்டாடுவதாக அவர் கூறினார்.

(அ)



## பஸ்கள் நிறுத்தாமையால் வீதிக்குவந்த மாணவர்கள்!

வவுனியா, செப். 29

பஸ்கள் நிறுத்தாமல் செல்வதால் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் பல்வேறு அசௌகரியங்களை சந்திப்பதாக தெரிவித்து வவுனியா கொல்லர்புளியங்குளம் பகுதியில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்றுக் காலை 7 மணியளவில் ஏ-9 பிரதான வீதியில் குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவிக்கையில்-

பாடசாலைக்குச் செல்வதற்காக காலை 6 மணிக்கே எமது பிள்ளைகள் வீட்டிலிருந்து சென்று பலமணி நேரம் காத்திருந்தும் பஸ்கள் நிறுத்தப்படாமையினால் வீட்டுக்கே திரும்பி வருகின்ற நிலைமை காணப்படுகின்றது.

இதேவேளை, பாடசாலை முடிவடைந்த பின்னரும் மாலை 4 மணிளவிலேயே பிள்ளைகள் வீட்டுக்கு வருகின்றனர். இதனால் எமது பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகளில் பின்னடைவு ஏற்படுவதுடன், பல்வேறு அசௌகரியங்களையும் சந்திக்கின்றனர்.

எனவே எமது பிள்ளைகளின் எதிர்காலம் கருதி பஸ்களை நிறுத்துவதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் கொல்லர்புளியங்குளம், மன்னகுளம், குஞ்சுக்குளம் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

மாணவர்களை வீதியில் காத்திருக்க விடாதீர்கள், மாணவர்களின் பயணத்திற்கு முக்கியத்துவம் கொடுங்கள்,எமது உரிமையை காப்பாற்றுங்கள் போன்ற வாசகங்கள் தாங்கிய பதாதைகளையும் அவர்கள் ஏந்தியிருந்தனர்.

ஆர்பாட்டகார்களுடன் கலந்துரையாடலை முன்னெடுத்த கனகராயன்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மாணவர்கள் போக்குவரத்தை மேற்கொள்வதற்கு பொலிஸார் ஒத்துழைப்புகளை வழங்குவதோடு, பஸ் சாரதி, நடத்துநர்களுக்கு அறிவுறுத்தல்களையும் வழங்குவதாக வாக்குறுதி வழங்கியதன் அடிப்படையில் ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது. (அ)

## இலங்கையில் முதலீடு செய்ய அதானி குழுமம் எதிர்பார்ப்பு!

கொழும்பு, செப். 29

அதானி குழுமம் எதிர்வரும் 10 ஆண்டுகளில் 100 பில்லியன் டொலரினை இலங்கையில் முதலீடு செய்யவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

வலுசக்தி துறைக்கே அதிக முதலீடுகளை மேற்கொள்வதற்கு அதானி குழுமம் எதிர்பார்த்துள்ளதாக குறித்த நிறுவனத்தின் தலைவர் கௌதம் அதானி தெரிவித்துள்ளார்.

அதானி நிறுவனம் தற்போது பல்வேறு நாடுகளிலும் அதானி குழுமம் முதலீடுகளை மேற்கொண்டு வருகின்றது.

(அ)

# வறுமைக் கோட்டின் கீழ் 26 இலட்சம் குடும்பங்கள்

### நிதி இராஜாங்க அமைச்சர் தகவல்

கொழும்பு, செப். 29

**நாட்டில் உள்ள 68 இலட்சம் குடும்பங்களில் 26 இலட்சம் குடும்பங்கள் வறுமைக் கோட்டின் கீழ் உள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.**

இலங்கை கலால் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கண்காணிப்பு விஜயத்தின்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

68 இலட்சம் குடும்பங்களில் 17 இலட்சம் பேர் சமுர்த்திப் பயனாளிகள் எனவும் மேலும் 7 இலட்சம் பேர் சமுர்த்தி நன்மைக்காக விண்ணப்பித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அரச வருமானம் நாட்டிலேயே மிகக் குறைந்த நாடாக மாறியுள்ளதாக குறிப்பிட்ட அமைச்சர், அரச வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கூறினார்.

இந்த நாட்டில் தென்னை, பனை போன்றவற்றின் மூலம் அரச வருமானத்தை அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக தெரிவித்த அமைச்சர், சகல துறைகளிலும் அரச வருமானத்தை அதிகரிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் தெரிவித்தார்.

அத்தியாவசியமற்ற உணவு மற்றும் பொருட்களை இறக்குமதி செய்வதை முடிந்தவரை நிறுத்தவேண்டும் என்றும் பொருட்கள், மருந்துகள் மற்றும் உரங்களை இறக்குமதி செய்வதற்கு டொலர்களை பயன்படுத்த வேண்டும் என்றும் அமைச்சர் கூறினார். (அ)

## எரிபொருள்களின் விலைகளை 100 ரூபாவினால் குறைக்கலாம்!

கொழும்பு, செப். 29

பெற்றோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியனவற்றின் விலைகளை லீற்றர் ஒன்றுக்கு 100 ரூபாவினால் குறைக்க முடியும் எனஎரிபொருள், மின்சாரம் மற்றும் துறைமுக கூட்டு தொழிற்சங்கங்களின் அழைப்பாளர் ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.

தற்பொழுது நாட்டில் நடைமுறையிலுள்ள விலைச் சூத்திரம் மற்றும் உலக சந்தை விலைகளின் அடிப்படையில் இவ்வாறு லீற்றர் ஒன்றுக்கு 100 ரூபாவினால் விலையை குறைக்க முடியும் என அவர் குறிப்பிட்டார்.

வரி மற்றும் லாபங்களை பெற்றுக் கொண்டதன் பின்னர் இந்த விலை குறைப்பை மேற்கொள்ள முடிந்தபோதிலும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் ஐந்து சந்தர்ப்பங்களில் இதனை செய்யத் தவறியுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஒரு லீற்றர் 95 ஒக்டேன் ரக பெற்றோலில் 174 ரூபாவும், ஒரு லீற்றர் 92 ஒக்டேன் ரக பெற்றோலில் 65 ரூபாவும், ஒரு லீற்றர் மண்ணெண்ணெய்யில் 85 ரூபாவும் அரசாங்கம் லாபமீட்டுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த லாபமானது வரி வருமானத்திற்கு மேலதிகமானது என அவர் கூறினார்.

தற்போதைய விலைச் சூத்திரத்தின் பிரகாரம் லங்கா இந்தியன் ஒயில் நிறுவனம் மக்களின் பணத்தை சுரண்டுவதாகவும் அரசாங்கம் அதற்கு உத வுவதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## திரிபோஷவை கர்ப்பிணிகள் அச்சமின்றி உட்கொள்ளலாம்!

கொழும்பு, செப். 29

அரசாங்கத்தினால் கிளினிக்குகளில் விநியோகிக்கப்படும் அஃப்லாடொக்சின் அடங்கிய திரிபோஷா கையிருப்பு அழிக்கப்பட்டுள்ளதால் கர்ப்பிணித் தாய்மார்கள் எவ்வித சந்தேகமும் இன்றி திரிபோஷாவை உட்கொள்ளுமாறு சுகாதார அமைச்சு அறிவித்தல் விடுத்துள்ளது.

இது தொடர்பில் பொய்யான தகவல்கள் பரப்பப்பட்டு வருவதால், திரிபோஷாவை உண்பது தொடர்பில் எந்தவொரு கர்ப்பிணித் தாய்க்கும் தேவையற்ற அச்சம் இருக்க வேண்டாம் என குடும்ப சுகாதார சேவைகள் அலுவலகத்தின் பணிப்பாளர் மருத்துவர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்துள்ளார்.

அஃப்லாடொக்சின் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட திரிபோஷா பயன்பாட்டிலிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளதாகவும், அதனால் கிளினிக்குகளில் வழங்கப்படும் திரிபோஷாவை பயன்படுத்த முடியும் எனவும் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

(அ)

## பிரதேச செயலகங்களுக்கிடையிலான எல்லை மீள்நிர்ணய கலந்துரையாடல்

முல்லைத்தீவு, செப். 29

தேசிய எல்லை மீள்நிர்ணயக் குழுவின் சுற்றறிக்கைக்கு அமைவாக முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான எல்லை மீள் நிர்ணயத்தை முடிவு செய்வதற்கான இறுதிக்கட்ட கலந்துரையாடல் மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

இதன்போது மாவட்ட எல்லை மறுசீரமைப்பு குழுவினால் தயாரிக்கப்பட்ட அறிக்கையானது சமர்ப்பிக்கப்பட்டு ஆராயப்பட்டு முடிவுகள் எட்டப்பட்டன.

கலந்துரையாடலின் இறுதியில் இறுதியான அறிக்கை தயாரிக்கப்பட்டு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இக் கலந்துரையாடலில் சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர், பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர், மாவட்ட புள்ளிவிபரவியலாளர், நிர்வாக கிராம அலுவலர்கள், மாவட்ட செயலக பிரதேச செயலகங்களின் காணி தொடர்பான உத்தியோகத்தர்கள், நில அளவை திணைக்கள உத்தியோகத்தர்கள், துறைசார் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

(அ)

## மதுப் பாவனை வீழ்ச்சி

கொழும்பு, செப். 29

உணவுப் பணவீக்கம் காரணமாக, நாட்டில் மதுப் பாவனையானது 20 வீதம் முதல் 30 வீதத்தினால் குறைவடைந்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

மதுவரித் திணைக்களத்துக்கான கண்காணிப்பு விஜயத்தின் பின்னர் அவர் இதனைத் தெரிவித்தார்.

அதன்போது, ஊடங்களுக்கு கருத்து வெளியிட்ட மதுவரி திணைக்கள ஆணையாளர் நாயகம் எம்.ஜே. குணசிறி, 2021ஆம் ஆண்டு கொரோனா தொற்று காரணமாக 22 பில்லியன் ரூபா வருமான இழப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

(அ)

# ஈரானில் புதிய கலாசார புரட்சியா? ஹிஜாப்க்கு எதிரான போராட்டம் தொடருமா?

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

1979இல் நடந்த ஈரான் இஸ்லாமியப் புரட்சியில் பெண்கள் முக்கிய பங்கு வகித்தமையினால், முன்னைய ஆட்சியாளர் முகமது ரெசா ஷா பாஹ்லவி அதிகாரத்தை விட்டு வெளியேற்ற பெரிதும் உதவியது. ஆனால் அயோத்துல்லா கொமேனி ஈரான் மீது கட்டுப்பாட்டை எடுத்தபின், கணிசமான எண்ணிக்கையில் பெண்கள் தங்கள் உரிமைகளை இழந்தனர் என்பதும் உண்மையே.

ஈரானிய புரட்சியின் பின்னரே, எல்லா பெண்களும் தொலைக்காட்சியில் செய்தி அறிவிப்பாளர்கள் உட்பட ஹிஜாப் கட்டாயமாக அணிய வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிட்டது.



1989 இல் கோமினியின் மரணத்திற்குப் பிறகு, மகளிர் மீதான கடுமையான சட்டத்தின் சில பகுதிகள் நீக்கப்பட்டன.

குறிப்பாக தெஹ்ரான் மற்றும் பிற பெரிய நகரங்களில் உள்ள பெண்கள், சுதந்திரமாக வெளியே செல்லத் துவங்கினர், ஆனால் தங்கள் தலைமுடி மற்றும் முழுமையான ஒப்பனை கொண்ட ஹிஜாப் அணிந்தே செல்ல வேண்டியிருந்தது.

**கடுமையான ஆடைக் கட்டுப்பாடு**

ஆயினும்கூட, 1979ஆம் ஆண்டின் பின்னர் ஈரான் பெண்கள் பலவீனமான உரிமைகளையே தொடர்ந்து எதிர்கொண்டனர். ஈரானில் பெண்களுக்கான உடை கட்டுப்பாடு கடுமையாக பின்பற்றப்பட்டு வருகிறது. ஹிஜாப் கட்டுப்பாடுகளை மீறும் பெண்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் நாடான ஈரானில், எல்லா நேரங்களிலும் பெண்கள் ஹிஜாப் அணிய வேண்டும், 7 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் தலைமுடியை முழுதும் மறைக்கும் வகையில் கட்டாயம் ஹிஜாப்பை அணிய வேண்டும் என்று அரசு கடுமையான ஆடைக் கட்டுப்பாட்டை விதித்திருக்கிறது. இதன் காரணமாக, ஈரான் அதிபர் இப்ராஹிம் ரெய்சிக்கு அந்த நாட்டுப் பெண்களும், சமூகச் செயற்பாட்டாளர்களும் கடும் எதிர்ப்பு தெரிவித்துவருகின்றனர்.

**குர்திஷ் பெண் அடித்துக் கொலை**

ஹிஜாப் அணியாத 22 வயதான குர்திஷ் பெண் இரு வாரங்களுக்கு முன் அடித்துக் கொலை செய்யப்பட்ட பின் ஈரானில் போராட்டம் தீவிரம் அடைந்தது. குர்திஷ் பெண் மக்சா அமினியின் உடல், செப்ரெம்பர் 17 அன்று காலை, அடக்கம் செய்வதற்காக அவரது தாயகமான குர்திஸ்தான் மாகாணத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. ஹிஜாப் அணியாததால் இளம்பெண் அடித்து கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து ஈரானில் குர்திஷ் பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



ஈரான் நாட்டில் பெண்கள் ஹிஜாப் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் குர்திஸ்தானில் சரியாக ஹிஜாப் அணியவில்லை எனக் கூறி மாஷா அமினி என்பவரை இரு வாரத்திற்கு முன் போலீசார் கைது செய்தனர். அதனைத் தொடர்ந்து காவல் நிலையத்திற்கு அழைத்து செல்லப்பட்ட இளம்பெண்ணை போலீசார் கடுமையாக தாக்கியதாக தெரிகிறது. இதில் படுகாயமடைந்த அவர் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.



**வேலைநிறுத்தத்திற்கு அழைப்பு**

குர்திஷ் சிவில் சமூக அமைப்புகள் குர்திஸ்தான் மாகாணம் முழுவதும் பொது வேலைநிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்தனர். ஈரானின் சர்வாதிகாரத் தலைவரான அயதுல்லா கமேனியின் சுவரொட்டி களைக் கிழித்தெறிந்த சக்கேஸில் போராட்டக்காரர்களின் காணொளிகள் சமூக ஊடகங்களில் பரவியுள்ளன.

மஹ்சா அமினி இறந்ததை அடுத்து ஈரானில் தொடர் போராட்டங்கள் வெடித்தன. பெண்கள் தலைமுடியை வெட்டியும், ஹிஜாப்களை எரித்தும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கைதான அமினி கொடூரமாக தாக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இந்த குற்றச்சாட்டை மறுத்த ஈரான் பொலிஸார், அவர் மாரடைப்பால் இறந்ததாகக் கூறினர். அமினியின் உறவினர் ஒருவர் கூறுகையில், அவருக்கு இதய நோயின் வரலாறு இல்லை என்றார்.



**34 போராட்டக்காரர்கள் பலி**

இதையடுத்து , அமைதியான போராட்டக்காரர்கள் மீது ஈரானின் சக்சேஸ் பகுதியில் பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். 34 போராட்டக்காரர்கள் பலியானதுடன் பலர் காயமடைந்துள்ளனர்.

ஈரானிய அரசின் புதிய ஆடைக் கட்டுப்பாடு விதிமுறைக்கு எதிராக ஆத்திரமடைந்த சமூக ஆர்வலர்களும், பெண் செயற்பாட்டாளர்களும், அரசுக்கெதிராகப் போராட்டத்தில் இறங்கியிருக்கின்றனர். ஏராளமான பெண்கள் தனிப்பட்ட முறையில் தங்களின் தலைமுடியை வெட்டி, ஹிஜாப்பை எரித்து அரசுக்குத் தங்களின் எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர். அதன் வீடியோக்களும் சமூக வலைதளங்களில் வேகமாகப் பரவிவருகின்றன.



சில வருடங்கள் முன்பும் மக்னம் ஐஸ்கிறிம் விளம்பரத்தில் ஈரானின் புனித விதிகளை மீறுவதாக விளம்பரத்தில் வரும் அப்பெண் தளர்வாக ஹிஜாப் அணிந்து கலாசாரத்தை மீறியுள்ளார் என்றும்,

அவர் கண்ணியமாக இல்லை என குற்றம் சாட்டப்பட்டது. இதன்பின் ஹிஜாப் மற்றும் ஒழுக்க விதிகளின்படி, பெண்கள் விளம்பரங்களில் நடிப்பதற்கு அனுமதி இல்லாமல் போனது.

இதன் பின்னர் ஈரானின் இஸ்லாமியக் குடியரசின் பொறுப்பு சரியானதை கட்டளையிடுவது, தீமையை தடுப்பது. பொது ஒழுக்கத்திற்கு எதிராகவும், பெண்களின் மதிப்புகளை அவமதிக்கும் வகையிலும் இரண்டு சர்ச்சைக்குரிய விளம்பரங்களை வெளியிட்டதற்காக குற்றம் சாட்டி ஐஸ்கிரீம் உற்பத்தியாளர் நிறுவனமான டோமினோவுக்கு எதிராக ஈரானிய அரசு வழக்கை தாக்கல் செய்தது.

**ஈரானில் புதிய கலாசார புரட்சி ?**

தற்போது பெண்களின் இந்த தொடர் போராட்டங்கள் ஈரானின் இஸ்லாமிய அடிப்படைவாத ஆட்சிக்கு எதிரான கோசங்கள் எழுப்பப்படுகின்றன. இஸ்லாமிய ஆட்சிபீடத்திற்கு எதிரான போராட்டமாக விரிவடையும் வாய்ப்பும் உள்ளது. இக்கால ஹிஜாப்க்கு எதிரான போராட்டம் தொடருமானால் ஈரானில் புதிய கலாசார புரட்சி உருவாகும் சாத்தியங்கள் தென்படுகின்றன.



# யாழ்ப்பாணத்தில் இந்தி கற்கைநெறி!

கட்டுரையாளரின் கருத்தோடு எமக்கு முழுமையான உடன்பாடு என்பதல்ல. ஆனால் இது தொடர்பான விவாதம் பல தெளிவுகளை ஏற்படுத்த உதவும் என்பதால், இதனை இங்கே தருகின்றோம். இதுதொடர்பாக ஆக்கபூர்வமான கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. (ஆ-ர்)

மாயமான்

யாழ். இந்துக்கல்லூரியில் இந்தி மொழியைக் கற்பிப்பதற்கான திட்டம் முன்னெடுக் கப்படுவது தொடர்பாகப் பல வாத விவாதங்கள் ஆங்காங்கே குரல்களை எழுப்பின. இது குறித்து யாழ் இந்துக்கல்லூரி அதிபர் தனது பழைய மாணவர்களுக்கு ஒரு சுற்றறிக்கையையும் அநுப்பியிருந்தார். கடந்த சிலவாரங்களுக்கு முன்னர் கனடா வந்துபோன யாழ் நகரபிதா விஸ்வலிங்கம் மணிவண்ணன் அவர்களுடனும் நான் இதுபற்றிப் பேசினேன். யாழ் மாணவர்கள் இந்தி கற்றிருந்தால் இந்தியாவினால் வழங்கப்படும் புலமைப்பரிசில்களுக்கு அவர்கள் தெரிவாவது இலகுவாக இருக்கும் என்பது அதிபரின் வாதங்களில் ஒன்று. சிங்களத்தை கட்டாய மொழியாக்குவதுபோலல்ல இது. மாலை வேளைகளிலும் மாணவர்கள் விரும்பிய நேரங்களிலும் இந்தியைக் கற்றுக்கொள்ள வசதி செய்வதே இதன் நோக்கம். இதன் பின்னால் நாம் பயப்படுவதற்கு எதுவுமில்லை என்றவாறு மணிவண்ணன் கருத்துத் தெரிவித்திருந்தார். இந்தியத் தூதரகம் ஏற்கெனவே இந்தியைக் கற்பித்து வருவதாகவும் அங்கு இந்தி கற்பிப்பவரைத் தாம் தமது கல்லூரியிலும் வந்து கற்பிக்க ஒழுங்கு செய்துள்ளதாகவும் இந்துக் கல்லூரி அதிபர் தெரிவித்திருக்கிறார்.



பிற மொழிகளைக் கற்பதில் தீமைகள் எதுவு மில்லை. ஆங்கிலம் ஜேர்மன் பிரெஞ்சு ரஷ்ய மொழி கற்றவர்கள் பலர் வெளிநாட்டுத் தூதர கங்களிலும் சர்வதேச அமைப்புகளிலும் வேலை களைப் பெற்றுக்கொள்ள வசதியாகவிருக்கும். ஆனால் வெளிநாட்டுத் தூதரகங்கள் தாமாக முன்வந்து உதவி செய்வதாகக் கூறும் போது அதன் நோக்கம் பற்றி விழிப்புணர்வு இருக்க வேண்டுமென்பதுதான் எனது கரிசனை. முன் னொரு காலத்தில் சீன, ரஷ்ய தூதரகங்கள் தமது கொள்கை பரப்புக் காரணங்களுக்காக இலவச மொழிக்கல்விகளை வழங்கினார்கள். ஆனால் அவ்வகுப்புகள் பாடசாலைகளுக்குள் நுழையவில்லை.

யாழ் மாணவர்கள் கற்றுக்கொள்வதற்கு நிறைய விடயங்கள் இருக்கின்றன. ஜேர்மன், நோர்வே ஆகிய நாடுகளின் உதவியுடன் பல தொழிற்பயிற்சி நிலையங்கள் (vocational training centres) ஏற்கெனவே நாடு முழுதும் இயங்குவதோடு பல பட்டதாரிகளை உருவாக்கியும் தந்துள்ளன. இக் கல்லூரிகள் எதுவும் தமது மொழிகளைக் கற்றுக்கொள்ளும்படி வற்புறுத்தவுமில்லை, ஆசை காட்டவுமில்லை. யாப்பாணத்தில் தமிழரால் நிர்வகிக்கப்படும் ஊக்கி போன்ற பயிற்சி நிலையங்கள் தகவல் தொழில்நுட்பத் துறையில் பல நிபுணர்களை உருவாக்கி வருகின்றன. தாதிகள் பயிற்சி யாழ்ப்பாணத்தில் மிகவும் குறைவு. போர் முடிந்த கையோடு வவுனியா மருத்துவமனையில் தமிழ் பேசும் தாதிகள், மருத்துவர்கள் பற்றாக்குறையால் தமிழ் நோயாளிகள் சிரமப்பட்டனர். இப்படியிருக்க இந்தி கற்றால் வேலைகள் எடுக்கலாம் என்று வாதிப்பது வெறும் முட்டாள் தனம். யாழ் இந்துக்கல்லூரியில் இந்தி கற்பிப்பது என்பது பாரிய உள்நோக்கத்துடன் ஆரம்பிக்கும் ஒரு கபடத் திட்டம்.

கொழும்பிலிருந்து வரும் இன்றைய செய்தி இதை உறுதிப்படுத்துகின்றது. செப்ரெம்பர் 14ம் திகதி கொழும்பிலுள்ள சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தில் இந்திய தூதரகத்தின் கலாசாரக் கிளை ஓர் 'இந்தி விழாவை' நடத்தியது. கொழும்பு ஊடகச் செதிகளின்படி சுமார் 75 இந்தி ஆர்வலர்கள், கல்விமான்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என நாடுபூராவுமிருந்து கலந்துகொண்டதாகக் கூறப்படுகிறது. விழாவில் கண்டிய நடனம், பொலிவூட் மற்றும் சிங்களப் பாட்டுக்கள் இருநாடுகளுக்குமிடையேயான கலாச்சாரப் பாலம் என்று இத்தியாதிகள் காட்சிப் படுத்தப்பட்டன. தமிழுக்கு இங்கு ஏதாவது இடமிருந்ததா என்பது பற்றி தெரியாது

இந் நிகழ்வில் பேசிய இந்திய தூதுவர் கோபால் பால்கே "இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையேயான ஆயிரம் வருடங்களுக்கும் மேலான கலாசாரம், மொழி, இலக்கியம், மதம் ஆகியன அமைத்துத் தந்த பாலங்களை இந்தி மொழியும் இலக்கியமும் வலுப்படுத்தியுள்ளன. பாரம்பரிய ஒளியேற்றலும் சரஸ்வதி துதியும் இந்த இரட்டை நாடுகளின் நாகரிக இணைப்பின் சாட்சிகள்" எனக் கூறியிருக்கிறார்.



இந் நிகழ்வில் இந்தியா வில் இந்தி கற்பதெற்கென புலமைப்பரிசிகள் வழங்கப் பட்ட 18 இலங்கை மாணவர்கள் கௌரவிக்கப் பட்டனர். ஆக்ராவிலுள்ள மத்திய இந்தி கலாசார நிலையத்தில் தங்கி இந்தி கற்பதற்கான அனைத்து செலவுகளும் இவர்களுக்கு வழங்கப்படும் எனக் கூறப்படுகிறது. இம்மாணவர்கள் செப்ரெம்பர் 15 அன்று இந்தியாவுக்குப் பயணமாகினர். அதே வேளை ஏற்கெனவே இக்கலாச்சார நிலையத்தில் இந்தி கற்றுத் தேறியவர்களும் இவ் விழாவில் கௌரவிக்கப்பட்டனர். இவற்றை விடவும் நாடு தழுவிய ரீதியில் இந்தியில் கட்டுரை எழுதல், கவிதை எழுதல், பாடுதல் என்பனவற்றில் போட்டிகள் வைக்கப்பட்டுப் பரிசில்களும் வழங்குவதற்கான திட்டங் களும் உள்ளன என கொழும்பு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

**பின்னணி என்ன?**

இந்திய மாணவர்களே ஆங்கிலத்தைக் கற்றுக்கொண்டு அமெரிக்கா கனடா என்று தப்பியோடிக்கொண்டிருக்கும்போது இந்தியைக் கற்கும் இலங்கையர் ஒருவர் இந்தியாவில் சென்று பணிபுரிவார் என இந்துக் கல்லூரி அதிபர் முதல் அவரை ஆதரிப்பவர்கள்வரை நம்புவார்களேயானால் அவர்கள் பற்றிய மதிப்பீட்டை நான் உங்களிடமே விட்டுவிடுகிறேன். இலங்கையில் இந்தி கற்பித்தல் என்பது ஓர் அரசியல் தந்திரம் என்றே நான் நினைக்கிறேன்.

ஈழத் தமிழர்களை இந்தியா தனது தொப்புள் கொடி உறவுகளாகக் கவனித்துக்கொள்கிறது என்ற அச்சமும் பொறாமையும் சிங்களவர்களிடத்தில் இருக்கிறது. விடுதலை இயக்கங்களுக்கு உதவி செய்தமை மூலம் இந்திரா காந்தி அதை மேலும் வலுப்படுத்தியிருந்தார். இதன் காரணமாக இலங்கை, இந்தியாவின் எதிரியான சீனாவுடன் தனது '2000 வருட கலாசாரத் தொடர்புகளைக்' காட்டி நெருக்கமாகியது. இந்த சந்தர்ப்பத்தைப் பாவித்து அம்பாந்தோட்டை, துறைமுக நகரம் எனச் சீனாவின் கால்கள் இலங்கையில் வெகுவாகப் பதிந்துவிட்டன. இதனால் இந்தியா மிகவும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கொழுபுத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இழந்தது. திருகோணமலை, மன்னாரில் செய்யவிருந்த முதலீடுகளுக்கு ஆப்புவைக்கப்பட்டது. இலங்கைத் தமிழரால் எந்தவித பிரயோசனமும் இல்லை அவர்களுக்காக முண்டு கொடுக்கப்போய் நிரம்ப இழந்துவிட்டோம் என்ற நிலைக்கு வியாபாரி மோடி வந்துவிட்டார். இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினை ஏற்படுத்திக்கொடுத்த இடைவெளிக்குள் புகுந்து இந்தியா தனது இழந்த கேந்திர ஸ்தானத்தை மீளப் பெறத் திட்டம் தீட்டியிருக்கிறது. இதுவே இந்தியா இலங்கைக்கு தற்போது நீட்டியுள்ள கலாசாரக் கரம்.

மோடியின் கொள்கை வகுப்பாளர்களான ஆர்,எஸ்.எஸ். மிக நீண்ட காலமாகவே இந்திய வல்லாதிக்கத்துக்கான திட்டங்களைத் தீட்டி நடைமுறைபடுத்தி வருகிறது. இந்தி அதன் முதலாவது ஆயுதம். மதம் இரண்டாவது. மோடியை ஆட்சியில் இருத்தியதுமல்லாது தொடர்ந்து நிலைநிறுத்தியும் வருமளவுக்கு அதன் பலம் உலகமெங்கும் வியாபித்திருக்கிறது. இலங்கையில் தற்போது நடைபெற்று வரும் தில்லுமுல்லுகளின் பின்னால் ஆர்.எஸ்.எஸ். சின் கரங்கள் இல்லையென உறுதியாகக் கூறிவிடமுடியாது. ரணில் விக்கிரமசிங்ககூட இதில் ஓர் அங்கமாகவும் இருக்கலாம். இந்து சமுத்திர பிராந்தியத்தில் சீனாவின் வருகையைத் தவிர்க்க அமெரிக்காவின் அனுசரணையுடன் இந்தியா பல வியூகங்களை அமைத்திருக்கிறது. அதில் ஒன்று இலங்கையைக் கலாசார ரீதியில் தன்னுடன் நெருங்க வைப்பது. கண்டிக்கும் போதிகாயாவுக்கும் பௌத்த பாலத்தைப் போட்டு சிங்கள யாத்திரீகர்களை இந்தியாவுக்கு அழைத்து இந்தியா இனிமேல் சிங்களவர்களின் நண்பன் என நம்பவைப்பதே இந்தியாவின் திட்டம்.

இதனால் தமிழர்கள் இந்தியாவினால் கைவிடப்படுவார்களா என நீங்கள் கேட்கலாம். இந்தியா விட்டாலும் நாங்கள் ஒருபோதும் தங்களை உதறிவிடப் போவதில்லை தொப்புக்கொடி உறவுகள் அல்லவோ என்றொரு கூட்டம் ஏப்போதும் இருக்கத்தானே செய்யும். அவ்வப்போது வெருட்டுவதற்கு அதற்குத் தமிழர்கள் தேவை. இந்தியாவையும் விட்டுவிட்டு நாம் போவதற்கு யார் இருக்கிறார்கள் என்பதும் அதற்குத் தெரியும். அதற்குள் நாம் எல்லோரும் இந்தியைக் கற்றுவிட்டால்? அம்பானி குழுமமும், அதானி குழுமமும் மன்னாரிலும் யாழ்ப்பாணத்திலும் அமைக்கப்போகும் நிறுவனங்களில் பணிபுரிய இந்தி தேவைதானே?


யாழ்ப்பாணத்தில் இந்திய கலாசார மையம் இன்னும் திறந்தபாடில்லை. அதை இன்னும் தமது நிர்வாகத்துக்குள் எடுக்க மாநகரசபையும் தயாராகவில்லை. சிங்களமும் அதற்குக் கட்டை போட்டுக்கொண்டிருக்கிறது. இறுதியில் அதானி குழுமமும் அம்பானி குழுமமும் தங்களது அலுவலகங்களை அங்கு நிர்மாணிக்கலாம். விரைவில் யாழ் பத்திரிகைகளில் "இந்தி பேசும் பணியாளர்கள் தேவை" என்று விளம்பரம் வரும். அப்போது இந்துக் கல்லூரி இந்திக் கல்லூரியாக மாறியிருந்தால் ஆச்சரியப்படத் தேவையில்லை.

பாரதி கண்ட கனவு இனிமேற்தான் நனவாகப் போகிறது. "சிங்களத் தீவினுக்கோர் பாலம்" இனிமேல்தான் அமையப்போகிறது. (மறுமொழி)

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**18)** 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

**19)**  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

..........................................

**20)** தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122 , 124 , 126 , ............. , ...........    ii) 18 , 15 , 12 , ............. , ...........

**21)**

| | | |
|---|---|---|
| 3, | 9, | 14, |
| 10, | 6, | 12, |

பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

..................................................................

**22)** ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

.................................................................................

**23)** ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

...........................................................

**24)** பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3*l* 300*ml* பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

...........................................................

**25)** 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? .............................................

**26)** **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 | i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 | ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | | ............ | ......... |

**27)** கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

..................................................

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

..................................................

**29)** ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

..................................................    (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

**30)** சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)     2)     3) 

**31)** வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி    2) இரணைமடுக்குளம்    3) பராக்கிரமபாகு சமுத்திரம்

**32)** உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்ட எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம்    2) உதிப்பு    3) உடலைத் தளர்த்தல்

**33)** தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன்    2) வாளேந்திய சிங்கம்    3) நெற்கதிர்

**34)** பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976    2) 1851    3) 1815

**35)** வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு    2) இறப்பர், தாழம்பூ    3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

**18.** 1) 6    2) 8    **19.** $\frac{3}{10}$
**20.** 1) 128, 130    2) 9, 6
**21.** 3, 6, 9, 12
**22.** 745    **23.** 455
**24.** 1l 100ml / 1100ml    **25.** ரூபாய் 144.00
**26.** 1) 190    2) 100    3) 290
**27.** 15 : 30    **28.** 5m 50cm / 550cm
**29.** 36 பூக்கள்
**30.** 1    **31.** 2    **32.** 3
**33.** 2    **34.** 3    **35.** 2

### கல்வி tv CHANNEL-1

**29.09.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

### கல்வி tv CHANNEL - 2

**29.09.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



## 1497 ஆவது மீலாதுன் நபி விழா; தாறுஸ்ஸபாவில் கொடியேற்றம்

அம்பாறை, செப். 29

முஹம்மது நபிகள் நாயகத்தின் 1497ஆவது மீலாதுன் நபி விழாவை முன்னிட்டு கல்முனை தாறுஸ்ஸபா அமைய தலைமையகத்தில் அமையத்தின் தவிசாளர் மௌலவி ஏ.ஆர். சபா முஹம்மத் (நஜாஹி) தலைமையில் நேற்றுமுன் தினம் புனித கொடியேற்றம் மிக சிறப்பாக இடம்பெற்றது.

மௌலவிமார்களின் மெலித் முழக்கத்துடன் நிகழ்வின் பிரதம அதிதி அஸ்ஸெய்யித் மக்கத்தார் அப்துல் மஜீத் கலீபத்துல் ஹல்லாஜ் அவர்களினதும், நிகழ்வில் கலந்து கொண்ட உலமாக்கள், கல்விமான்கள், பிரதேச முக்கியஸ்தர்களினதும் பங்குபற்றலுடன் புனித கொடி ஏற்றி வைக்கப்பட்டது.

(அ)

# ஒலுவில் துறைமுக அபிவிருத்திக்கு பச்சைக்கொடி காட்டியது இந்தியா!

## தூதுவருடன் மு.கா. தலைவர் சந்திப்பு

கொழும்பு, செப். 29

"மீன்பிடித் துறைமுகங்களை அபிவிருத்தி செய்யும் இந்தியாவின் நிதியுதவித் திட்டத்தின் கீழ், ஒலுவில் துறைமுகத்தையும் அபிவிருத்தி செய்வது தொடர்பில் முன்வைத்த வேண்டுகோளை மிகவும் சாதகமாகப் பரிசீலிப்பதாக இலங்கைக்கான இந்திய தூதுவர் தெரிவித்தார்."

- இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லேவுக்கும், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கும் இடையிலான சந்திப்பு இந்திய இல்லத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது தற்போதைய அரசியல் சூழ்நிலை தொடர்பில் கலந்துரையாடியதோடு,



ஒலுவில் துறைமுகம் பாவனைக்கு உகந்தாக இல்லாத துர்ப்பாக்கிய நிலையில், அதன் நுழைவாயில் பிரதேசத்தைச் சூழ மணல் மேடு குவிவதாலும், கடலரிப்பு காரணமாக அயல் கிராமங்களும் கூட பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாலும், அலைத் தடுப்புச் சுவரின் தவறான நிர்மாணம் காரணமான சீர்கேடுகளினால் ஏற்பட்டுள்ள விளைவுகள் தொடர்பிலும் அவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

மீன்பிடித் துறைமுகங்களை அபிவிருத்தி செய்யும் இந்தியாவின் நிதியுதவித் திட்டத்தின் கீழ், ஒலுவில் துறைமுகத்தையும் அபிவிருத்தி செய்வது தொடர்பில் முன்வைத்த வேண்டுகோளையும் மிகவும் சாதகமாகப் பரிசீலிப்பதாக தூதுவர் தெரிவித்தார்.

இவை தொடர்பில் மீன்பிடித் துறை அமைச்சர், இந்திய தூதரக வர்த்தக ஆலோசகர் ரகேஷ் பாண்டே, துறைமுக அதிகார சபை உயர் அதிகாரிகள் ஆகியோருடனான பேச்சுவார்த்தையொன்றுக்கு ஏற்பாடு செய்யப்படும் என ஹக்கீம் குறிப்பிட்டார். (அ-6)

# இந்திய கல்விசார் ஆய்வு மன்றத்துடன் தென்கிழக்கு பல்கலை உடன்படிக்கை



அம்பாறை, செப். 29

கல்வி மற்றும் ஆய்வு மேம்பாட்டுக்காக தென்கிழக்கு பல்கலைக்கழகம் இந்திய கல்விசார் ஆய்வு மன்றத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டுள்ளது.

அண்மைக்காலமாக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் உயர் கல்வியினை சர்வதேசமயப்படுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்றது. பல்கலைக்கழக உபவேந்தர் பேராசியர் ஏ. றமீஸ் தலைமையில் பல்கலைக்கழக சர்வதேச விவகாரங்களுக்கான அலுவலகத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.ஏ. றியாட் றூஸி இதற்கான முழு முயற்சியில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக சர்வதேச விவகாரங்களுக்கான அலுவலகம் சர்வதேச ரீதியாக செயற்படுகின்ற பல்கலைக்கழகங்கள், கல்வி மற்றும் ஆய்வு சார்ந்த அமைப்புக்களுடன் புரிந்துணர்வு உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டு, அவற்றினை பயனுள்ளவகையில் நடைமுறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றது. அதிலொரு கட்டமாக இந்திய கல்விசார் ஆய்வு மன்றத்துடனான சந்திப்பும் உடன்படிக்கையும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இணைய வழி ஊடாக இடம்பெற்றது.

இவ்வுடன்படிக்கைக்கான ஆரம்பகட்ட முன்னெடுப்புக்களை தென்கிழக்குப் பல்கலைக்கழகப் சந்தைப்படுத்தல் முகாமைத்துவத் துறைத் தலைவர் பேராசிரியர் எம்.பீ.எம். இஸ்மாயில் மேற்கொண்டிருந்தார்.

இந்நிகழ்வில் பல்கலைக்கழக உபவேந்தர், பல்கலைக்கழக சர்வதேச விவகாரங்களுக்கான அலுவலகத்தின் பணிப்பாளர், இந்திய கல்விசார் ஆய்வு மன்றத்தின் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இந்திய கல்விசார் ஆய்வு மன்றமானது இந்தியாவிலுள்ள பெரும்பாலான அரச பல்கலைக்கழக கல்வியலாளர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஓர் அமைப்பாகும். இவ்வமைப்புடனான புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் கற்றல், கற்பித்தல், ஆய்வு மற்றும் புத்தாக்கத் துறைகளில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக ஆசிரியர்களும் மாணவர்களும் பயனடைவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதன்போது ஆசிரிய-மாணவ பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டங்கள், ஆய்வு மாநாடுகள், ஆய்வு வெளியீடுகள், சான்றிதழ் மற்றும் டிப்ளோமாக பாடநெறிகள், ஆசிரியர் மற்றும் மாணவர் பயிற்சிகள் உள்ளிட்ட பல ஒன்றிணைந்த வேலைத் திட்டங்களை துரித கதியில் நடைமுறைப்படுத்துவதற்கும் இணக்கம் காணப்பட்டது. (அ)

# இளம் எழுத்தாளர்களின் மேம்பாட்டு கூடல் நிகழ்வு



அம்பாறை, செப். 29

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட இளம் எழுத்தாளர்களுக்கான மேம்பாட்டுக் கூடல் நிகழ்வு அக்கரைப்பற்று பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் சரண்யா சுதர்சனின் மேற்பார்வையின் கீழ், அம்பாறை மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஏ.எல் தௌபீக் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தின் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம்.தமீம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வின் வளவாளராக எழுத்தாளரும், பேஜஸ் புத்தக இல்லத்தின் அதிபருமான சிராஜ் மஷ்ஹூர் கலந்து கொண்டதோடு, அக்கரைப்பற்று கலாசார உத்தியோகத்தர் ஏ.எம்.தௌபீக், அக்கரைப்பற்று கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி நவப்பிரியா, ஆலையடிவேம்பு கலாசார உத்தியோகத்தர் ஜெளபர், முஸ்லிம் சமய கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கலாசார உத்தியோகத்தர் எம்.எச்.எம் முத்தார் மற்றும் இளம் எழுத்தாளர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது வளர்ந்து வரும் இளம் எழுத்தாளர்கள் தங்களது பேனாவை முரண்பாடு ஏற்படாமல் எவ்வாறு பயன்படுத்தவேண்டும். அதனை எப்படிப் பயன்படுத்தலாம். எழுதும் போது கையாள வேண்டிய முறைமைகள் மற்றும் நுணுக்கங்கள், எழுதுவதில் உள்ள தாற்பரியங்கள் போன்ற பலதரப்பட்ட விடயங்களையும் வளவாளராகக் கலந்து கொண்ட சிராஜ் மஷ்ஹூர் மிகத் தெளிவாக விளங்கப்படுத்தினார். அத்தோடு, செயற்பாட்டு ரீதியாகவும் இளம் எழுத்தாளர்கள் எழுப்பிய பல்வேறு சந்தேகங்களுக்கும் தெளிவை வழங்கினார். (அ)

# ஹெரோயினுடன் ஒருவர் கைது

மட்டக்களப்பு, செப். 29

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டாளைச்சேனை பிரதேசத்தில் ஹெரோயினுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைக்கப்பட்ட இரகசிய தகவலின்படி, குறித்த பிரதேசத்திற்கு சென்ற பொலிஸ் குழுவினர் நபர் ஒருவரை கைது செய்துள்ளதுடன் அவரிடமிருந்து 30 மில்லிகிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டுள்ளது.கைது செய்யப்பட்ட சந்தேக நபரை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் படுத்தப்பட்ட போது எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (அ)

ஈழநாடு



# ஐரோப்பா செல்லும் நோர்ட்ஸ்ட்ரீம் எரிவாயுக் குழாய்களில் வெடிப்பு!

## ரஷ்யாவின் நாசவேலை காரணமா?

கீவ், செப். 29

ரஷ்யாவில் இருந்து ஐரோப்பாவுக்கு செல்லும் நோர்ட் ஸ்ட்ரீம் 1 மற்றும் 2 எரிவாயு குழாய்களில் கசிவு ஏற்பட்டுள்ள நிலையில் திட்டமிட்டே எரிவாயு குழாய்களில் ரஷ்யா கசிவை ஏற்படுத்தியதாக உக்ரைன் குற்றஞ்சாட்டியுள்ளது.

நோர்ட் ஸ்ட்ரீம் குழாய்களில் சேதம் ஏற்படுத்தப்பட்டமை திட்டமிட்ட "பயங்கரவாத தாக்குதல்". இது ஐரோப்பிய ஒன்றியத்தை நோக்கிய "ஆக்கிரமிப்புச் செயல்" என உக்ரேன் ஜனாதிபதியின் ஆலோசகர் மைக்கேலோ போடோலியாக் கூறினார்.

குளிர் காலத்திற்கு முன்னர் ஐரோப்பாவில் பீதியை ஏற்படுத்த ரஷ்யா விரும்புவதாகவும் தெரிவித்த அவர், உக்ரைனுக்கு இராணுவ ஆதரவை அதிகரிக்குமாறு ஐரோப்பிய ஒன்றியத்தை வலியுறுத்தினார்.

கசிவுகள் வெளிப்படுவதற்கு முன்பு நீருக்கடியில் குழாய்களில் வெடிப்பு ஏற்பட்டதாக நில அதிர்வு நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். இவை வெடிப்புகள் என்பதில் சந்தேகமில்லை என்று சுவீடனின் தேசிய நில அதிர்வு மையத்தின் பிஜோர்ன் லண்ட் கூறினார்.

குழாயில் அழுத்தம் குறைவதாக நோர்ட் ஸ்ட்ரீம் 2 பராமரிப்பாளர்கள் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் எச்சரித்தனர். இந்நிலையில் போர்ன்ஹோல்ம் தீவுக்கு அருகில் உள்ள பகுதியை கப்பல்கள் தவிர்க்க வேண்டும் என்று டெனிஸ் அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்தனர்.

கடலுக்கு அடியில் நோர்ட் ஸ்ட்ரீம் குழாயில் ஒரே நாளில் முன்னோடியில்லாத வெடிப்புகள் ஏற்பட்டு, சேதமடைந்துள்ளதாக பராமரிப்பாளர்கள் குறிப்பிட்டனர்.

போர்ன்ஹோல்ம் தீவுக்கு அருகில் பால்டிக் கடலின் மேற்பரப்பில் எரிவாயு கசிவுகளை கட்டும் காட்சிகளை டென்மார்க்கின் பாதுகாப்புக் கட்டளையகம் வெளியிட்டுள்ளது. கடலில் 1 கி.மீ. வரை கசிவுகள் அடையாளம் காணப்பட்டதாகவும் பாதுகாப்பு கட்டளையகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் எரிவாயு குழாய்களில் ரஷ்யாவால் வேண்டுமென்றே சேதம் ஏற்படுத்தப்பட்டது என்ற கருத்தை ஏனைய ஐரோப்பிய தலைவர்களும் வெளியிட்டுள்ளனர்.



போலந்து பிரதமர் மேட்யூஸ் மொராவிக்கி இது நாசவேலை என்று குற்றம் சாட்டினார். மேலும் இது உக்ரைன் போருடன் தொடர்புடையதாக இருக்கலாம் என்று அவர் கூறினார்.

நோர்ட் ஸ்ட்ரீம் குழாய்களில் ஒரே நேரத்தில் பல கசிவுகள் ஏற்பட்டுள்ளதென்பது தற்செயலாக இருக்காது. இது திட்டமிட்ட சதி என டென்மார்க் பிரதமர் மெட்டே பிரடெரிக்சன் தெரிவித்தார்.

அதே நேரத்தில் கடலுக்கு அடியில் எரிவாயு வலையமைப்பின் மீதான தாக்குதலை அதிகாரிகள் நிராகரிக்கவில்லை என ஜேர்மன் ஊடகங்களில் உறுதிப்படுத்தப்படாத அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே இந்த சம்பவம் மிகவும் கவலைக்குரியது எனத் தெரிவித்துள்ள ரஷ்ய ஜனாதிபதி மாளிகையான கிரெம்ளின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ், வேண்டுமென்றே தாக்குதல் நடத்துவதற்கான சாத்தியத்தை நிராகரிக்க முடியாது என்றும் கூறினார்

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பின் காரணமாக விதிக்கப்பட்ட ஐரோப்பிய பொருளாதாரத் தடைகளுக்குப் பதிலடியாக எரிவாயு விநியோகத்தை குறைப்பதைப் பொருளாதார ஆயுதமாக ரஷ்யா பயன்படுத்துவதாக ஐரோப்பிய ஒன்றியம் முன்பு குற்றம் சாட்டியது.

எனினும் ரஷ்யா இதை மறுக்கிறது. தங்கள் மீதான மேற்குலக நாடுகளின் பொருளாதாரத் தடைகள் காரணமாக எரிவாயு குழாய் உள்கட்டமைப்பை சரியாகப் பராமரிக்க இயலாதுள்ளதாக ரஷ்ய தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# உக்ரைனுக்கு அமெரிக்கா 11 பில்லியன் டொலர் உதவி!

## ஆயுத, பொருளாதார ரீதியில்

நியூயோர்க், செப். 29

ஜனாதிபதி ஜோ பைடனின் கோரிக்கையை ஏற்று ரஷ்யாவின் போரை எதிர்கொண்டு வரும் உக்ரைனுக்கு மேலும் 11.7 பில்லியன் டொலர் ஆயுத மற்றும் பொருளாதார உதவிகளை வழங்க அமெரிக்க காங்கிரஸ் ஒப்புதல் அளித்துள்ளது.

உக்ரைன் பாதுகாப்பு திறன்களை மேம்படுத்தவும் பாதுகாப்பு உபகரணங்களை வாங்கவும் 4.5 பில்லியன் டொலர்கள் வழங்கப்படும். அத்துடன், இராணுவம், உளவுத்துறை மற்றும் பிற பாதுகாப்பு துறை சார்ந்த ஆதரவுகளுக்காக 2.7 பில்லியன் டொலர்கள் இந்த நிதியுதவி திட்டத்தின் கீழ் வழங்கப்படும் என ஆதாரங்கள் தெரிவிக்கின்றன.

இதனைவிட அடுத்த காலாண்டில் உக்ரைன் அரசாங்கத்தின் பட்ஜெட்டுக்கு ஆதரவு வழங்க இதன் கீழ் 4.5 பில்லியன் டொலர்களும் ஒதுக்கப்படும். இதனைக் கொண்டு ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி நிர்வாகம் அத்தியாவசிய ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கலாம். மோதலில் இருந்து தப்பிச் செல்லும் உக்ரேனியர்களுக்கு ஆதரவளிக்கலாம் மற்றும் பொதுமக்களுக்கு உதவவும் ஏனைய முக்கியமான செலவுகளை ஈடுகட்டவும் இந்த நிதியைப் பயன்படுத்த முடியும் என்று உக்ரைன் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு போரில் இருந்து உக்ரைன் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள உதவியான 11.7 பில்லியன் புதிய அவசர கால இராணுவ மற்றும் பொருளாதார உதவிகளை வழங்கும் முடிவுக்கு பைடன் இந்த மாத தொடக்கத்தில் காங்கிரசின் ஒப்புதலைக் கோரினார். இதற்கே காங்கிரஸ் ஒப்புதல் வழங்கியுள்ளது.

கடந்த 7 மாதங்களாக ரஷ்யாவின் போரை எதிர்கொண்டு வரும் உக்ரைனுக்கு அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகள் பல பில்லியன் டொலர் ஆயுத, பொருளாதார உதவிகளை ஏற்கனவே வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# உக்ரைன் பகுதிகளை ரஷ்யாவுடன் இணைக்கும் அறிவிப்பு நாளை வரும்!

## பாராளுமன்றில் வெளியிடுவார் புடின்



மொஸ்கோ, செப். 29

உக்ரைனில் ஆக்கிரமித்துள்ள பகுதிகளை ரஷ்யாவுடன் இணைத்துக்கொள்வதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் நாளை வெள்ளிக்கிழமை வெளியிடும் சாத்தியம் உள்ளதாக பிரிட்டன் உளவுத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ரஷ்யாவுடன் தங்கள் பகுதிகளை இணைப்பது தொடர்பாக ஆக்கிரமிப்பு உக்ரைன் பகுதிகளில் கடந்த வெள்ளிக்கிழமை தொடங்கிய சர்ச்சைக்குரிய பொதுவாக்கெடுப்பு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நிறைவடைந்தது.

இந்த நிலையில், ரஷ்ய பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் ஜனாதிபதி விளாடிமிர் புடின் நாளை வெள்ளிக்கிழமை உரையாற்றவுள்ளார். இதன்போது ஆக்கிரமிக்கப்பட்ட உக்ரைன் பகுதிகளை ரஷ்யாவுடன் இணைத்துக் கொள்வதற்கான அதிகாரபூர்வ அறிவிப்பை ஜனாதிபதி விளாடிமிர் புடின் வெளியிடுவதற்கான அனைத்து வாய்ப்புகளும் உள்ளன என பிரிட்டன் உளவுத்துறை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

உக்ரைன் மீதான போரில் அந்த நாட்டில் சுமார் 20 வீதமாக பகுதிகளை ரஷ்யா கைப்பற்றியுள்ளது. எனினும் அண்மைக் காலங்களில் உக்ரைன் படைகள் தீவிர பதிலடி கொடுத்து ரஷ்யாவிடம் இழந்த பகுதிகளை மீட்டு வருகின்றன. போரில் ரஷ்யா வுக்கு ஏற்பட்டுவரும் பின்னடைவு புடின் மீதான அதிருத்தியை ரஷ்யாவில் ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் உக்ரைனில் ஆக்கிரமித்துள்ள பகுதிகளை ரஷ்யாவுடன் இணைத்துக் கொள்வதற்கான அறிவிப்பை வெளியிடுவதன் மூலம் தனது ஆதரவை பெருக்கிக்கொள்ள புடின் முயல்வதாக அதிகாரிகள் கருதுகின்றனர்.

எனவே, பாராளுமன்ற உரையின்போது ஆக்கிரமிப்பு உக்ரைன் பகுதிகளை இணைத்துக் கொள்வதற்கான அறிவிப்பை புடின் வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று பிரிட்டன் உளவுத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)

# பால்டிக் கடலினுள் பெரும் வெடிப்பு அதிர்வுகள் பதிவு!

## அதனாலேயே குழாய்கள் சேதம் கடலில் கலக்கும் எரிவாயு கப்பல்களுக்கு பேராபத்து

பாரிஸ், செப். 29

பால்டிக் கடலில் இரண்டு பெரும் வெடிப்புகள் நிகழ்ந்திருப்பதை டென்மார்க், சுவீடன், ஜேர்மனி நாடுகளது நிலநடுக்க அவதானிப்பு மையங்கள் உறுதி செய்துள்ளன. அந்த வெடிப்புகளைத் தொடர்ந்தே "நோட் ஸ்ட்ரீம்" எரிவாயுக் குழாய்கள் சேதமடைந்து வாயுக் கசிவு ஏற்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை டென்மார்க் நேரப்படி 02. 03 மணிக்கு முதலாவது வெடிப்பினால் ஏற்பட்ட அதிர்வு ரிச்டர் அளவில் 2.3 புள்ளியாகப் பதிவாகியுள்ளது.

இரண்டாவது வெடிப்பு மாலை 19.03 மணிக்கு 2.1 புள்ளியாகப் பதிவாகி உள்ளது. டென்மார்க்கின் நிலநடுக்க செயற்பாடுகளை அவதானிக்கும் நிலையம் இத் தரவுகளை வெளியிட்டுள்ளது. பெரும் குண்டு வெடிப்பினாலேயே இந்த அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன என்று நம்பப்படுகிறது.

நோர்ட் ஸ்ட்ரீம் - 1 ஜேர்மனிக்கும் ரஷ்யாவுக்கும் இடையே 1224 கிலோ மீற்றர்கள் நீளமுடைய எரிவாயுக் குழாய் இணைப்பு ஆகும். இந்தக் குழாய் வழியான எரிவாயு விநியோகத்தை செப்ரெம்பர் மாத ஆரம்பத்தில் இருந்து ரஷ்யா நிறுத்தி வைத்துள்ளது. பராமரிப்பு வேலைகளுக்காகவே விநியோகம் நிறுத்தப்படுவதாக அது கூறியிருந்த போதிலும் குழாயில் இன்னமும் எரிவாயு நிரம்பி உள்ளது. அதே போன்று நோட் ஸ்ட்ரீம் - 2 குழாய் 1230 கிலோ மீற்றர்கள் நீளம் கொண்ட இணைப்பு ஆகும். உக்ரைன் போர் ஆரம்பித்ததை அடுத்து இந்த எரிவாயுக் குழாய்த் திட்டத்தை ஜேர்மனி பயன்பாட்டுக்கு அனுமதிக்கவில்லை. எனினும் அதில் எரிவாயு நிரம்பியே உள்ளது.

பால்டிக் கடலின் அடியில் சமாந்தரமாகச் செல்கின்ற இவ்விரு குழாய்களிலுமே டென்மார்க் கடற்பகுதியில் மூன்று இடங்களில் கசிவு ஏற்பட்டு எரிவாயு வெளியேறி கடல் நீரின் மீது கொப்பளித்துக் கொண்டுள்ளது.

தொடர்ந்து வெளியேறிக் கொண்டிருக்கும் எரிவாயு கடல் நீரிலும் வளியிலும் கலப்பது ஆபத்தானது. நீரில் வாயுவின் அடர்த்தி அதிகரித்தால் கப்பல்கள் மிதக்கும் தன்மையை இழந்து மூழ்கிவிடும் அபாயம் உள்ளது. கடல் நீரின் மேல் தீப்பற்றுவதற்கும் வாய்ப்புள்ளது. இதனால் டென்மார்க் பாதுகாப்பு அமைச்சு எரிவாயு வெளியேறும் கடல் பகுதியைப் பாதுகாத்துக் கண்காணிப்பதற்காகக் கடற்படைக் கப்பல்களையும் விமானங்களையும் அனுப்பியுள்ளது. போர்ன்ஹோம் கரைகளை அண்டிய பகுதிகளில் எரிவாயுவால் மக்களுக்கு ஆபத்து உள்ளதா என்பதை நோர்வே மற்றும் டென்மார்க் அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். பால்டிக் கடலில் செல்லும் கப்பல்களுக்கு எச்சரிக்கை செய்திகள் விடுக்கப்பட்டுள்ளன.

டென்மார்க் எரிசக்தி அமைச்சு எரிவாயுக் கசிவினால் கடல் உயிரினங்கள் மற்றும் சுற்றுச் சூழலுக்கு ஏற்படக் கூடிய பாதிப்புகளை மதிப்பீடு செய்து வருகிறது. (அ)



# விமர்சிக்க வேண்டாம்!

சமீபத்தில் நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 20 ஓவர் போட்டி தொடரில் இந்திய தொடக்க வீரர் லோகேஷ் ராகுல் முதல் ஆட்டத்தில் 55 ரன் எடுத்தார். 2ஆவது ஆட்டத்தில் 10 ஓட்டங்களிலும், 3ஆவது ஆட்டத்தில் ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழந்தார்.

அடுத்த மாதம் 20 ஓவர் உலகக்கிண்ணப் போட்டி நடைபெறும் சூழலில் லோகேஷ் ராகுல் பார்ம் பற்றி சிலர் விமர்சனங்களை முன் வைத்தனர். இந்த நிலையில் லோகேஷ் ராகுலுக்கு முன்னாள் அணித்தலைவர் சுனில் கவாஸ்கர் ஆதரவு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது:-

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் ஆட்டத்தில் லோகேஷ் ராகுல் அரை சதம் அடித்தார். 2ஆவது ஆட்டத்தில் மழை காரணமாக போட்டி 8 ஓவர்களாக குறைக்கப்பட்டதால் அவர் முதல் பந்திலிருந்தே அதிரடியாக விளையாட வேண்டி இருந்தது. இதனால் லோகேஷ் ராகுல் தனது விக்கெட்டை அணிக்காக தியாகம் செய்தார். 3ஆவது போட்டியில் ஒரு ஓவருக்கு 9 ஓட்டங்களுக்கு மேல் எடுக்க வேண்டி இருந்தது. இது ஒரு போதும் எளிதானது அல்ல. அந்த ஆட்டத்தில் நல்ல தொடக்கத்தை அளிக்க விரும்பினார். இதனால் அதிரடியாக விளையாட முயற்சித்து ஆட்டமிழந்தார். அன்றும் தனது விக்கெட்டை தியாகம் செய்தார். அவரை விமர்சிக்க வேண்டாம். கோலியை போல லோகேஷ் ராகுல் சரியாக ஆடும் போது அவரை தடுக்க முடியாது. சில தேவையில்லாத ஷாட்களை தவிர்த்தால் ஓட்டங்களை குவித்துக் கொண்டே இருப்பார்-என்றார்.



# பார்சிலோனா அணிக்கு செல்லும் அஸென்ஸியோ?

ஸ்பானிய லா லிகா உதைபந்தாட்டக் கழகமான றியல் மட்ரிட்டின் முன்களவீரரான மார்கோ அஸென்ஸியோவைக் கைச்சாத்திட இன்னொரு ஸ்பானியக் கழகமான பார்சிலோனா முயல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நடப்புப் பருவகாலத்தில் பெரும்பாலும் அணியில் தெரிவு செய்யப்பட்டிருக்காத 26 வயதான அஸென்ஸியோ, றியல் மட்ரிட்டுடன் இன்னும் ஓராண்டு ஒப்பந்தத்தையே கொண்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மேற்கிந்திய தீவுக்கு எதிரான போட்டியில் வோர்னர், ஸ்டார்க், மார்ஷ், ஸ்டோனிஸ்!




மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராக நடைபெறவுள்ள இரண்டு போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 தொடருக்கான 16 பேர் கொண்ட அவுஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் இந்தியாவில் நடந்து முடிந்த இருபதுக்கு இருபது தொடரில் ஓய்வு வழங்கப்பட்ட டேவிட் வோர்னர், மார்கஸ் ஸ்டோனிஸ், மிட்செல் ஸ்டார்க் மற்றும் மார்ஷ் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த நான்கு வீரர்களும் முழங்கால், கணுக்கால் பிரச்னை மற்றும் ஓய்வு வழங்கப்பட நிலையில் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான போட்டியில் இணைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை இந்தியாவில் இரண்டு விரைவான அரைசதங்கள் அடித்த கமரூன் கிரீன், சுழற்பந்து வீச்சாளர் அஷ்டன் அகர் மற்றும் கேன் ரிச்சர்ட்சன் ஆகியோருக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

உலகக்கிண்ண தொடர் நெருங்கி வரும் நிலையில் எச்சரிக்கையுடன் மற்ற அணிகளுடனான தொடரை அணுகி வருவதாக அவுஸ்திரேலிய தெரிவுக்குழு தலைவர் கூறியுள்ளார்.

எதிர்வரும் 5 மற்றும் 7 ஆம் திகதிகளில் மேற்கிந்திய தீவுகள் அணியுடன் மோதும் அவுஸ்திரேலிய அணி, அதன் பின்னர் மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் இங்கிலாந்தை எதிர்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியா-பாகிஸ்தான் நேரடி கிரிக்கெட் தொடர் நடைபெறுவதற்கு வாய்ப்பில்லை




இந்தியா-பாகிஸ்தான் கிரிக்கெட் தொடரை நடத்த இங்கிலாந்து கிரிக்கெட் வாரியம் விருப்பம். பிற அணிகளுடனான தொடர்களில் மட்டும் பாகிஸ்தானுடன் இந்தியா விளையாடும். இந்தியா-பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகளுக்கு இடையே கடைசியாக கடந்த 2007ஆம் ஆண்டு நேரடி டெஸ்ட் தொடர் நடைபெற்றது. அதன்பிறகு இந்தியாவிற்கு எதிரான எல்லைதாண்டிய பயங்கரவாதத்தை பாகிஸ்தான் ஊக்குவிப்பதாக கூறி அந்நாட்டுடனான நேரடி கிரிக்கெட் தொடருக்கு மத்திய அரசு தடை விதித்தது. அதன் பிறகு இதுவரை இரண்டு அணிகளும் இருதரப்பு டெஸ்ட் தொடர்களில் விளையாடவில்லை. இந்நிலையில் இங்கிலாந்து கிரிக்கெட் வாரிய துணைத் தலைவர் மார்ட்டின் டார்லோ இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளை வைத்து இங்கிலாந்தில் டெஸ்ட் போட்டிகளை நடத்துவது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்துடன், பேசியதாக ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டு இருந்தது.

இது குறித்து பதில் அளித்த இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரிய மூத்த நிர்வாகி ஒருவர், இங்கிலாந்து கிரிக்கெட் வாரியம் தங்கள் சொந்த வணிக ஆதாயங்களுக்காக இந்த வாய்ப்பை வழங்கினாலும், இந்தியா-பாகிஸ்தான் இடையே இரு தரப்பு கிரிக்கெட் தொடர் நடத்தப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் எதுவும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

எனினுமி, பாகிஸ்தானுக்கு எதிரான நேரடி கிரிக்கெட் தொடரில் இந்தியா பங்கேற்பது குறித்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் முடிவெடுக்க முடியாது என்றும், அது மத்திய அரசின் முடிவு என்றும் அவர் கூறியுள்ளார். தற்போது, இந்திய அணி வெளிநாடுகளில் பிற அணிகள் பங்கேற்கும் தொடர்களில் மட்டுமே பாகிஸ்தானுடன் விளையாடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(அ)

# இந்திய அணி முதலிடத்தில் நீடிப்பு




ரி-20 கிரிக்கெட் போட்டியின் தரவரிசை பட்டியலில் இந்திய அணி முதலிடத்தில் நீடித்து வருகிறது. இந்தியாவுக்கு எதிரான தொடரை இழந்த அவுஸ்திரேலியா 6ஆவது இடத்தில் உள்ளது.

ரி-20 கிரிக்கெட் போட்டியின் அடிப்படையில் அணிகளின் புதிய தரவரிசைப் பட்டியலை ஐ.சி.சி. வெளியிட்டது.

இந்நிலையில், அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ரி-20 தொடரை வென்ற இந்திய அணி (268 புள்ளிகள்) ஒரு புள்ளி அதிகரித்து முதலிடத்தில் நீடிக்கிறது. 2ஆவது இடத்தில் இங்கிலாந்து (261 புள்ளி) உள்ளது. தென்னாபிரிக்கா (258புள்ளி) 3ஆவது இடத்திலும், பாகிஸ்தான் (258 புள்ளி) 4ஆவது இடத்திலும், நியூசிலாந்து (252 புள்ளி) 5ஆவது இடத்திலும் தொடருகின்றன. இந்தியாவுக்கு எதிரான தொடரை இழந்த அவுஸ்திரேலியா (250 புள்ளி) ஒரு புள்ளி குறைந்து 6ஆவது இடத்திலும், மேற்கிந்தியத் தீவுகள் (241 புள்ளி) 7ஆவது இடத்திலும், இலங்கை (237புள்ளி) 8ஆவது இடத்திலும், பங்களாதேஷ் (224 புள்ளி) 9ஆவது இடத்திலும், ஆப்கானிஸ்தான் (219 புள்ளி) 10ஆவது இடத்திலும் உள்ளன.

# பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு எதிராக தம்புள்ளை, மாத்தளையில் கையெழுத்து!

கொழும்பு, செப். 29

**பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை தம்புள்ளை, மாத்தளையில் முன்னெடுக்கப்பட்டது.**



இதற்கமைய நேற்று முன் தினம் பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக கையெ ழுத்து திரட்டும் நடவடிக்கை தம்புள்ளை, மாத்தளையில் மக்களின் பேராதரவுடன் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் பாராளுமன்ற உறுப் பினர் எம்.ஏ சுமந்திரன் தலை மையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப் பினர் இரா.சாணக்கியன் மற் றும் அரசியல்வாதிகள், சர்வ மதத் தலைவர்கள், பொது மக் கள் என பலரும் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.பயங்கர வாத தடைச்சட்டத்தினை நீக்கு மாறு வலியுறுத்தி இலங்கை தமி ழரசு கட்சியின் ஏற்பாட்டில் காங்கேசன்துறை முதல் அம்பாந் தோட்டை வரையில் கையெழுத் துப் போராட்டம் முன்னெடுக் கப்பட்டு வருகின்றமை என் பது குறிப்பிடத்தக்கது. (அ - 6)

# தாய், தந்தையை தாக்கினார் மகன் தந்தை தீ வைத்து எரித்துக் கொலை

கொழும்பு, செப். 29

ஹோகந்தர-வித்யாராஜ மாவத்தை பகுதியிலுள்ள வீடொன்றுக்கு முன்பாக மகன் ஒருவர் தனது தாய் மற்றும் தந்தையை மண்வெட்டி மற் றும் கத்தியால் தாக்கியுள்ளார்.

தாக்குதலில் தந்தை உயிரி ழந்துள்ளதுடன் தாய் படுகாய மடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மாலபே பொலிஸார் தெரி வித்தனர்.

சந்தேகநபரான மகன் தந்தையின் உடலை தீ வைத்து எரித்துள்ளதாகவும் பொலி ஸார் குறிப்பிட்டுள்ளனர்.

ரஞ்சித் சேனாரத்ன என்ற 57 வயதான ஓட்டோச் சார தியே சம்பவத்தில் உயிரிழந் துள்ளார்.

போதைப்பொருளுக்கு அடிமையாகி புனர்வாழ்வளிக் கப்பட்டிருந்த மகனை தாய் அண்மையில் வீட்டுக்கு அழைத்து வந்துள்ளதாகவும், தகராறு காரணமாக இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதா கவும் பொலிஸார் தெரிவித் தனர்.

28 வயதுடைய சந்தேக நபரான மகன் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளதா கவும் தாயின் கையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# இறக்குமதியாகும் வெங்காயத்துக்கு 50 ரூபா விசேட பண்ட வரி விதிப்பு!

கொழும்பு, செப். 29

இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயம் கிலோ வொன்றுக்கு, 50 ரூபா விசேட பண்ட வரியை நிதியமைச்சு விதித்துள்ளது.

கடந்த 23 ஆம் திகததி முதல் அமுலாகியுள்ள இந்த விசேட பண்ட வரி 3 மாதங்க ளுக்கு அமுலில் இருக்கும் என நிதி அமைச்சு அறிவித் துள்ளது.

மேலும், உப்பு இறக்குமதி யின்போது கிலோவொன்று விதிக்கப்படும் 40 ரூபா விசேட பண்ட வரியிலிருந்து 10 ரூபா வசூலிக்கப்பட வேண் டும் என்றும்,

எஞ்சிய தொகையை ஒளடத ஒழுங்குபடுத்த அதிகாரசபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட வணிக நோக் கமன்ற மருந்துகளை உற்பத்தி செய்யும் நிறுவனத்திற்கு தள் ளுபடி செய்யவேண்டும் என் றும் நிதி அமைச்சு உத்தரவு பிறப்பித்துள்ளது. (அ)

# காட்டு யானை தாக்கி மூன்று பேர் உயிரிழப்பு

கொழும்பு, செப். 29

அனுராதபுரத்தின் சில பிரதேசங்களில் காட்டு யானை தாக்கியதில் மூவர் உயிரி ழந்துள்ளனர்.

நேற்று முன் தினம் இரவு கெப்பிற்றி கொல்லாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரண்டு பகுதிகளில் காட்டு யானை தாக்கி யதில் ஆணொருவரும் பெண்ணொருவரும் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

இதேவேளை, அனுராதபுரம்-மொர கொட பகுதியில் நேற்று முன்தினம் மாலை காட்டு யானை தாக்கியதில் 58 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதனிடையே, கடந்த திங்கட்கிழமை எப்பாவல பிரதேசத்தில் காட்டு யானை தாக் கியதில் இருவர் உயிரிழந்தனர். (அ)

# ஆமி சுரங்க கைது!

கொழும்பு, செப். 29

திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் ஆமி சுரங்க எனப்படும் புத்திக பிரசாத்தும் மற்றுமொரு சந்தேகநபரும் முல்லேரியா - வல்பொலயில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி யொன்று சந்தேகநபர்களிடமிருந்து கைப்பற்றப் பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 2014 ஆம் ஆண்டு வெல்லம்பிட்டிய- உமகிலிய மைதானத்தில், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அரசியல் பிரசார மேடையை இலக்கு வைத்து துப்பாக்கிச்சூடு நடத்தியமை, 2018 ஆம் ஆண்டு பேலியகொடை யில் துப்பாக்கி ஒன்றை வைத்திருந்தமை, 2020 ஆம் ஆண்டு பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் அடையாள அட்டையை போலியாக தயாரித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளில் ஆமி சுரங்க கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டவர் என பொலிஸார் கூறினர். (அ)

# 30 பயணிகளுடன் பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளான பஸ்

கொழும்பு, செப். 29

அனுராதபுரத்தில் இருந்து பொலனறுவை நோக்கி பய ணித்த தனியார் பஸ் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத் துக்குள்ளாகியுள்ளது.

மின்னேரிய பொலிஸ் பிரி விற்குட்பட்ட பட்டுஓய பகுதி யில் நேற்று முன்தினம் இரவு இந்த விபத்து இடம்பெற் றுள்ளது.

விபத்தின் போது பஸ் சுமார் 30 பயணிகள் பயணித் துள்ளதுடன், காயமடைந்த 6 பயணிகள் ஹிங்குரக்கொடை வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டு மேலதிக சிகிச் சைக்காக பொலனறுவை வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டுள்ளனர்.

பஸ் சாரதியின் கவனக் குறைவு காரணமாகவே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பில் பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள் ளதுடன் மின்னேரிய பொலிஸ ார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# தமிழ்ச் சங்கத்தில் முஸ்லிம் காங்கிரஸ் நடத்தும் ராஜகுலேந்திரன், கே.எஸ்.சிவகுமாரன் நினைவு

நிந்தவூர், செப். 29

தமிழ் இலக்கியத் துறையில் பெரும் பங்காற்றி அண்மை யில் காலஞ்சென்ற சிரேஷ்ட சட்டத்தரணி ராஜ குலேந்தி ரன், திறனாய்வாளர், கே. எஸ். சிவகுமாரன் ஆகியோருக்கான நினைவேந்தல் நிகழ்வொன்றை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிர ஸின் புதிய வெளிச்சங்கள் இலக்கிய மய்யம், கொழும்பு -6 - ருத்ரா மாவத்தையில் அமைந்துள்ள கொழும்பு தமிழ்ச் சங்க, சங்கரப்பிள்ளை மண்டபத்தில் எதிர்வரும் ஒக்ரோபர் 2ஆம் திகதி ஞாயிறு மாலை 4.00மணிக்கு நடத்தவுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங் கிரஸ் தலைவரும், பாராளு மன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமின் தலைமையில் நடை பெறவுள்ள இந்த நிகழ்வில், உலக அறிவிப்பாளர் பீ. எச். அப்துல் ஹமீத், சாஹித்ய ரத்னா மு. சிவலிங்கம், சிரேஷ்ட ஊடகவியலாளர் என். எம். அமீன், மருத்துவக் கலாநிதி 'ஞானம்' ஞானசேக ரம் ஆகியோர் உரையாற்ற வுள்ளனர்

கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி - மணிப்புலவர் மருதூர் ஏ மஜீத் நினைவு அரங்கில் நடை பெறவுள்ள இந் நிகழ்வு முஸ் லிம் காங்கிரஸின் புதிய வெளிச் சங்கள் இலக்கிய மய்யம் தமி ழுக்கு தொண்டாற்றியவர் களை நினைவு கூரும் வரிசை யில் முன்னர் கவிக்கோ அப் துல் ரஹ்மான்,செனட்டர் மஷூர் மௌலானா, எஸ். எச். எம். ஜெமீல் போன்றோருக்கு நடத்திய நினைவேந்தல் நிகழ் வுத்தொடரில்ஒன்றாகும். (அ-06)

# ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைந்த மேலும் மூவர் கைது

கொழும்பு, செப். 29

கோட்டை-ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைந்து சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் மேலும் 3 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் பொழும்பு மத்திய குற்ற விசா ரணை பிரிவினரால் குறித்த நபர்கள் கைது செய்யப்பட் டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறு கைதான நபர் களை கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்தில் ஒப்ப டைத்துள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.

கைதான சந்தேகநபர்கள் 22, 40 மற்றும் 55 வயதுடைய அங்குணுகொலபெலெஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரியவருகிறது.

சம்பவம் தொடர்பாக பொலி ஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## தேசிய...

தேசிய பேரவையின் முதலாவது கூட்டம், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் இன்று நடைபெறவுள்ள நிலையிலேயே, மேற்படி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தேசிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, உத்தர லங்கா சபாகய (விமல் கூட்டணி), டலஸ் அணி என்பனவே தமது தரப்பில் எந்தவொரு உறுப்பினரும் தேசிய பேரவையில் இடம்பெற மாட்டார்கள் என அறிவித்துள்ளன.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர், எதிரணி பிரதம கொறடா ஆகியோர் தேசிய பேரவையில் பதவி நிலை உறுப்பினர்களாவர். எனினும், இன்றைய கூட்டத்தில் பங்கேற்கபோவதில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று அறிவித்தார். இதே நிலைப்பாட்டில்தான் எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்லவும் உள்ளார்.

அத்துடன், பாராளுமன்றத்தில் கோப் மற்றும் கோபா குழுக்களின் தலைமைப்பதவி எதிரணிக்கு வழங்கப்படாவிட்டால், தேசிய பேரவையை ஐக்கிய மக்கள் சக்தி புறக்கணிக்கும் எனவும் இடித்துரைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி வைத்துள்ள மனோ கணேசன், பழனி திகாம்பரம், ரவூப் ஹக்கீம், ரிஷாட் பதியுதீன் ஆகியோரின் பெயர்களும் தேசிய பேரவைக்கு பெயரிடப்பட்டுள்ளது. எனினும், அவர்கள் இன்றைய கூட்டத்தில் பங்கேற்பது குறித்து உறுதியான தகவல் இன்னும் வெளியாகவில்லை.

விமல் வீரவன்ஸ தலைமையிலான உத்தர லங்கா சபாகயவில் அங்கம் வகிக்கும் வாசு தேவ நாணயக்கார, உதய கம்மன்பில, அத்துரெலிய ரத்ன தேரர், திஸ்ஸ விதாரன ஆகியோரின் பெயர்களும், தேசிய பேரவைக்கு உள்ளடக்கப்பட்டுள்ளது.

தேசிய பேரவைக்கான உறுப்பினர்கள் கடந்த 23 ஆம் திகதி சபாநாயகரால் பெயரிடப்பட்டனர்.

தேசிய பேரவையில் இடம்பெறுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிபந்தனை விதித்துள்ள நிலையில், தமது அனுமதியின்றியே பெயர் பிரேரிக்கப்பட்டுள்ளது என தமிழ்த் தேசியக் கட்சிகளின் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## இந்தியா...

திருகோணமலை பகுதியைச் சேர்ந்த இரண்டு ஆண்கள், ஒரு பெண் மற்றும் மூன்று சிறுவர்கள் உள்ளடங்களாக 6 பேர் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இரவு தலைமன்னார் கடல் ஊடாக சட்ட விரோதமான முறையில் இந்திய செல்ல முயன்றுள்ளனர்.

இதன்போது கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது குறித்த 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

18 வயதிற்கு மேற்பட்ட இரண்டு ஆண்களும் பெண் ஒருவரும் 3 சிறார்களும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

திருகோணமலையை சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட குறித்த 6 பேரையும் கடற்படையினர் விசாரணைகளின் பின்னர் நேற்று புதன்கிழமை காலை தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

தலைமன்னார் பொலிஸார் விசாரணைகளின் பின்னர் குறித்த நபர்களை நேற்று புதன்கிழமை மாலை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

இதன்போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் 18 வயதிற்கு மேற்பட்ட இரண்டு ஆண்களும் பெண் ஒருவரையும் எதிர்வரும் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

ஏனைய 18 வயதுக்கு குறைந்த மூன்று சிறுவர்களையும் சிறுவர் நன்னடத்தை பிரிவு அதிகாரியிடம் ஒப்படைக்க உத்தரவிட்டார். (அ)

## 1 இறாத்தல்...

அதிகரிக்கப்பட்டுள்ளதோடு, நூற்றுக்கு இரண்டரை வீதம் சமூக பாதுகாப்பு ஒத்துழைப்பு வரி அறவிடப்படுவதாலும் இந்த தீர்மானத்தை மேற்கொள்ளவுள்ளதாக அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கோதுமை மா ஒரு மூடையின் விலையானது 21 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளது.

கோதுமைக்கு விலை அதிகரிக்கப்பட்டபோதிலும் சந்தையில் கோதுமைக்கு பற்றாக்குறையே நிலவுகின்றது.

வரி அறவீடுகள் அதிகரிப்பு மற்றும் கோதுமை விலை அதிகரிப்பு ஆகியன வற்றை அடிப்படையாக கொண்டு நோக்கும்போது பாண் ஒரு இறாத்தலை 500 ரூபாவிற்கு விற்பனை செய்வதற்கு வெதுப்பக உரிமையாளர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர் எனவும் அகில இலங்கை வெதுப்பக உற்பத்தியாளர்கள் சங்கத்தினை தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்தார். (அ)

## ஜனாதிபதி...

பெற்றுள்ளது.

குறைந்தது 10 நிமிடங்கள் வரை இருவரும் சந்தித்து கலந்துரையாடினர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்போது சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுகளின் தற்போதைய நிலை மற்றும் கடன் மறுசீரமைப்பு தொடர்பாக நரேந்திர மோடி ரணில் விக்கிரமசிங்கவிடம் வினவியுள்ளார்.

இதனையடுத்து இலங்கையில் முதலீடுகளை அதிகரிக்க வேண்டும் என்ற ரணில் விக்ரமசிங்கவின் கோரிக்கையை சாதகமாக ஏற்றுக்கொண்ட நரேந்திர மோடி, இலங்கையில் இந்தியாவின் முதலீடுகள் அதிகரிக்கப்பட்டு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவியளிக்கப்படும் என்று உறுதியளித்துள்ளதாகவும் குறிப்பிட்டார். (அ)

## பயங்கரவாத...

பட்டது.

அரசியல்வாதிகள், சர்வமதத் தலைவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் இதில் பங்கேற்றனர்.

மக்களை வதைக்கும் கொடிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்குமாறு வலியுறுத்தி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி, சர்வஜன நீதி அமைப்பு, தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்களின் கூட்டமைப்பு ஆகியவற்றின் ஏற்பாட்டில் காங்கேசன்துறை முதல் அம்பாந்தோட்டை வரையில் ஊர்தி வழிப் போராட்டமாகச் சென்று கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (அ)

## கட்சித்...

தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்படவுள்ளதாக தெரியவருகிறது.

இன்று பாராளுமன்றம் கூடவுள்ள நிலையில் கட்சித்தலைவர்கள் கூட்டமும் காலை இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ரணில் நகைச்சுவையாளர்!

### கூறுகிறார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, செப். 29

தற்போதைய ஜனாதிபதி ஆட்சிக்கு வந்ததன் பின்னர் தள்ளாடும் பாலம் ஒன்றைக் கடக்க வேண்டியுள்ளதாகக் கூறினாலும், நாட்டிலுள்ள 220 இலட்சம் மக்களையும் தள்ளாடும் பாலத்தின் கீழே தள்ளிவிட்டுவிட்டு, ராஜபக்ஷர்களும், அவர்களின் நெருங்கிய நண்பர்களுமே தள்ளாடும் பாலத்தை தற்போது கடந்துவிட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தற்போதைய ஜனாதிபதி ஒரு நகைச்சுவையாளர் என்றும் தற்போதைய அரசாங்கம் சதிகார அரசாங்கம் எனவும் கூறிய எதிர்க்கட்சித் தலைவர், மக்களுக்கு எதிராகச் செயற்பட்ட அனைவரும் வரலாற்று நெடுகிழும் மோசமான விளைவுகளுக்கு முகங்கொடுக்கவே நேரிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

புத்தல பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் தொகுதிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே சஜித் பிரேமதாஸ இவ்வாறு கூறினார்.

இந்தக் கூட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தியின் மொனராகலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டபிள்யூ.எச். எம்.தர்மசேன ஏற்பாடு செய்திருந்தார்.

இந்நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமாக இருந்தால் புதிய மக்கள் ஆணையொன்று அவசியம் என்று தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர், விரைவில் தேர்தலை நடத்துங்கள் என்றும் யானை, காக்கை வேடமிட்டு வந்தாலும் மக்கள் இந்தத் தடவை சரியான பாடத்தை புகட்டுவார்கள் என்றும் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண,குறிப்பிட்ட சட்டகத்திற்கு வெளியே சிந்தித்து,புதிய முறைமைகளுக்கான அணுகலை பெறவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

கிராமங்களுக்கு, நகரங்களுக்கு நாட்டிற்கு என பணியாற்றுவதற்கே ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றும் எனவும், புதிய தொழில்நுட்பங்கள் ஊடாக குறைந்த செலவில் அதிகளவான இலாபத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படும் எனவும், கோட்டாபயவின் அரசாங்கத்தைப் போல் அல்லாது தான் உள்ளிட்டக் குழுவினர் எதிர்க்கட்சியிலிருந்த வண்ணமே மக்களின் நல்வாழ்வுக்காக பாடுபட்டதாகவும் எதிர்க்கட்சி தலைவர் கூறினார். (அ)

# அமைச்சரின் மகன் கைது

கொழும்பு, செப். 29

அமைச்சர் பிரசன்ன ரணவீரவின் மகன் உள்ளிட்ட 5 பேர் கிரிபத்கொட பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். மாணவர் ஒருவர் மீது தாக்குதல் மேற்கொண்டமை தொடர்பில் இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ குறிப்பிட்டார்.

யுவதி ஒருவருக்கு வாழ்த்து அட்டை பெற்றுக்கொடுத்தமையை அடிப்படையாகக் கொண்டு இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட மாணவர்களுக்கு பொலிஸ் பிணை வழங்கப்பட்டுள்ளது.

கிரிபத்கொட - மாகொல வீதியிலுள்ள தனியார் கல்வி நிறுவனம் ஒன்றுக்கு அருகில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (அ)

# ஆண் மாணவர்களின் பெறுபேறுகள் வீழ்ச்சி!

அண்மையில் வெளியான 2021(22) உயர் தர பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் பாடசாலை மாணவர்களில் 35.12 வீத ஆண் மாணவர்களும், 64.88 வீத மாணவிகளும் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க தகைமை பெற்றுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

ஆண்பிள்ளைகளின் பரீட்சை பெறுபேறுகள் வீழ்ச்சி அடைந்து வருவது குறித்து பரவலாக விமர்சனங்கள் முன் வைக்கப்படுகின்றன.

கையடக்க தொலைபேசி, மோட்டார் சைக்கிள் ஆகிய இரண்டும் ஆண் மாணவரின் கல்வியில் பாரிய தாக்கத்தை சமகாலத்தில் ஏற்படுத்தி வருவதாக கூறப்படுகிறது.போதைப்பொருள் பாவனை அடுத்ததாக செல்வாக்கு செலுத்துவதாக கூறப்படுகிறது.

ஆண்கள் பாடசாலைகளின் பெறுபேறுகள், பெண்கள் பாடசாலைகளை விட மிகவும் குறைவாக உள்ளது. இதனால் ஆண்கள் பாடசாலை அதிபர்களும், ஆசிரியர்களும் பல்வேறு விமர்சனங்களுக்கு உள்ளாக வேண்டியுள்ளது.

தற்போது அரச ஊழியர்களில் கணிசமானோர் பெண்களாக இருப்பதோடு, ஆசிரியர் சேவையில் ஏறத்தாழ 74.4 வீதம் பெண்களாகவும், 26.6 வீதம் ஆண்களாகவும் இருக்கின்றனர். (அ)

## ஜப்பான்...

இலங்கை மற்றும் ஜப்பானுக்கு இடையிலான நெருங்கிய உறவுகளை மேலும் வலுப்படுத்தல் மற்றும் எதிர்கால வேலைத்திட்டங்கள் குறித்து இரு நாட்டு தலைவர்களும் நீண்ட நேரம் கலந்துரையாடினர்.

இதேவேளை, ஜப்பானிய பேரரசர் நருஹிதோவுக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பொன்றும் நேற்று முற்பகல் நடைபெற்றது.

ரோக்கியோவில் உள்ள பேரரசரின் உத்தியோகபூர்வ இல்லமான இம்பீரியல் அரண்மனையில் நடைபெற்ற இச் சந்திப்பின்போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டமை குறிப்பிடதக்கது.

## கடன்பட்ட...

வட்டி விகிதத்தை உயர்த்தியதால் சில தொழில்முனைவோர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

வங்கி முறையைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கைகள் அவசியமானாலும், வர்த்தகர்களைப் பாதுகாப்பதும் மிகவும் முக்கியமானது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டுதல்களுக்கு அமைய உரிய சலுகைகளை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறும் வங்கிகளின் தலைவர்களிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அரச வங்கிகளின் தலைவர்களுடன் நிதி அமைச்சின் வளாகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் பேசிய அவர், இது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அமைச்சுக்கு அறிவிக்குமாறும் கேட்டுக்கொண்டார்.(அ)

ஈழநாடு
Eelanadu

# ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுத்தும் புதிய சட்டத்தை அரசு நீக்கவேண்டும்

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து




**கொழும்பு, செப். 29**

**ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுத்தும் புதிய சட்டத்தை இலங்கை அரசாங்கம் மாற்றியமைக்க வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரியுள்ளது.**

இந்த கடுமையான கட்டுப்பாடுகள், அமைதியான முறையில் ஒன்று கூடுவதற்கும், கருத்து தெரிவிக்கும் உரிமையை முடக்குவதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

மேலும் இந்த சட்டங்கள் நீண்ட காலமாக தடுப்புக் காவலில் வைப்பதையும் உறுதிப்படுத்துகிறது என அதன் தெற்காசியப் பணிப்பாளர் மீனாட்சி கங்குலி குற்றம் சாட்டியுள்ளார்.

பொதுமக்களின் எதிர்ப்பைக் கடுமையாகக் கட்டுப்படுத்தும் புதிய ஒழுங்குமுறை ஜனாதிபதியின் அவநம்பிக்கையான முயற்சி என்றும் அவர் சாடியுள்ளார்.

பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்கப் போராடும் ஒரு நாடு மக்களின் குரல்களைக் கேட்க வேண்டுமே தவிர அவர்களை சிறையில் தள்ளக்கூடாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் ஐ.சி.சி.ஆர்.பி.யின் கீழ் அமைதியான ஒன்றுகூடல் மற்றும் கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமைகளை மதிக்கவும் பாதுகாக்கவும் இலங்கைக்கு கடமைகள் உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

உரிமைகள் தொடர்பில், அரசாங்கத்தின் தொடர்ச்சியான மீறப்பட்ட வாக்குறுதிகள் மற்றும் ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் கீழ் துரிதப்படுத்தப்பட்ட அடக்கு முறைகள் என்பவற்றை தடுப்பதற்கு, வலுவான தீர்மானம் அவசியம் என்றும் மீனாட்சி கங்குலி தெரிவித்துள்ளார். எனவே ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள், இலங்கை மக்களின், அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை நிறைவேற்றுவதற்கு தங்களால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார். (அ)

# இலங்கையில் தேடப்படும் இரண்டு பேர் தமிழ்நாட்டுப் பொலிஸாரினால் கைது!

சென்னை, செப். 29

இலங்கையில் கொலை, கொள்ளை, ஆள் கடத்தல் உள்ளிட்ட பல வழக்குகளில் தொடர்புடைய இரு குற்றவாளிகளை தமிழகப் பொலிஸார் கைது செய்து புழல் சிறையில் அடைத்துள்ளனர்.

கடந்த மார்ச் 22 ஆம் திகதி முதல், பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த இலங்கைத் தமிழர்கள் தனுஷ்கோடி வழியாக அகதிகளாக தமிழகத்துக்குத் தப்பிச் சென்றுள்ளனர். அவர்கள் மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 8 பேர் இந்தியக் கடற்கரைக்கு வந்ததை அறிந்த கரையோரக் காவல் படையினர் கடந்த ஒகஸ்ட் 21ஆம் திகதி அவர்களை மீட்டு கடலோர பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இவ்வாறு வந்தவர்களில் கிளிநொச்சிப் பகுதியைச் சேர்ந்த சந்திரகுமார் என்ற நபர், தொடர்பில் நடத்திய விசாரணையில் பிரபல நகைக்கடையில் கொள்ளையடித்து தமிழ்நாட்டுக்கு தப்பிச்சென்றுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது. கொலை மற்றும் மனித கடத்தல் தொடர்பான குற்றங்களுக்காக அவர் பிணையில் இருப்பதும் கண்டறியப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த கிருபாகரன் என அடையாளம் காணப்பட்ட மற்றொரு குற்றவாளி கொலைக் குற்றச்சாட்டில் இலங்கையில் தேடப்பட்டு வருவதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இலங்கை பாதுகாப்பு அதிகாரிகள் தமிழக பொலிஸாருக்கு அளித்த தகவலின்படி, தேடப்படும் குற்றவாளிகள் இருவரும் ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மண்டபம் அகதிகள் முகாமில் அகதிகளாக வசிப்பது கண்டுபிடிக்கப்பட்டது. (அ)

# ஆட்சியாளர்களுக்கு பதிலளிக்க உரிய நேரத்தில் தேர்தல் தேவை

## ஆணைக்குழுவிடம் பேராயர் வலியுறுத்து

கொழும்பு, செப். 29

"வானுயர கோபுரம் அமைக்கப்பட்ட நாட்டில், பட்டினியால் பிள்ளைகள் மயங்கி விழுகின்றனர். முறையற்ற அபிவிருத்தி நடவடிக்கைகளால் உலகம் முழுதும் கையேந்த வேண்டிய நிலையில் நாடு உள்ளது. எனவே, ஆட்சியாளர்களுக்குப் பதிலளிப்பதற்கு உரிய நேரத்தில் தேர்தல் நடத்தப்பட வேண்டும்."

- இவ்வாறு பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

நாட்டில் நடுத்தர வர்க்கத்தினர் - மத்திய வருமானம் பெறுபவர்கள் என அடையாளப்படுத்தப்பட்டவர்களும் தற்போது வறுமையின் பிடிக்குள் சிக்கியுள்ளனர்.



பாரிய பெருந்தெருக்கள் அமைக்கப்பட்டன. வானுயர கோபுரங்கள் அமைக்கப்படுகின்றன. விமான நிலையம் நிர்மாணிக்கப்பட்டது. ஆனால் விமானம் வருவதில்லை. நாட்டு மக்களுக்கு ஒருவேளை உணவுகூட பெரும் சவாலாக மாறியுள்ளது.

சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்காக நத்தார் காலத்தில் கொழும்பைச் சொர்க்க புரியாக்கப் போகின்றார்களாம். ஆனால், நாட்டு மக்களுக்கு உண்பதற்கு உணவு இல்லை. அறநெறி பாடசாலைக்கு வரும் மாணவர்கள் மயங்கி விழுகின்றனர். உலகம் முழுவதும் கையேந்தப்படுகின்றது. எனவே, போலி நடவடிக்கைகள் வேண்டாம்.

அதேவேளை, உள்ளூராட்சி சபைத் தேர்தல் அடுத்த வருடம் மார்ச் மாதம் கட்டாயம் நடத்தப்பட வேண்டும். அரசியல் அழுத்தங்களுக்கு பணிந்து தேர்தலைப் பிற்போட வேண்டாம் என தேர்தல் ஆணைக்குழுவிடம் கேட்டுக்கொள்கின்றோம். தேர்தல் என்பது எமக்கான உரிமை. அரசுக்குப் பதிலளிக்க வாய்ப்பு வேண்டும்-என்றார். (அ)

## சர்வதேச நாணய நிதிய மாநாட்டில் இலங்கை பிரதிநிதிகள் பங்கேற்பர்

கொழும்பு, செப். 29

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் வருடாந்த மாநாடு ஆகியவற்றில் கலந்துகொள்ள இலங்கைப் பிரதிநிதிகள் தீர்மானித்துள்ளனர்.

தாம் உள்ளிட்ட பிரதிநிதிகள் இந்த மாநாடுகளில் கலந்துகொள்ளவுள்ளதாக பதில் நிதி அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் வொஷிங்டன் நகரில் எதிர்வரும் 10ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரை இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

மத்திய வங்கியின் ஆளுநர், நிதி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட பிரதிநிதிகள் குழுவினர் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளதாக ஷெஹான் சேமசிங்க குறிப்பிட்டார்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு மற்றும் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடனை பெற்றுக் கொள்ளுதல் போன்ற செயற்பாடுகள் காரணமாக இம்முறை மாநாடு இலங்கைக்கு மிக முக்கியம் வாய்ந்ததாக அமையும் என பதில் நிதி அமைச்சர் ஷெஹான் சேமசிங்க கூறினார். (அ)

## சிறுவர் வயதெல்லை உயரும்?

கொழும்பு, செப். 29

இலங்கையில் சிறுவர்கள் என அழைக்கப்படுபவர்களின் வயதை பதினாறிலிருந்து பதினெட்டாக அதிகரிக்க வேண்டும் என சிறுவர் மற்றும் இளைஞர்கள் கட்டளைச் சட்டத்தை திருத்துவதற்காக முன்வைக்கப்பட்ட பிரேரணைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாலின சமத்துவம் மற்றும் சமத்துவத்தை உறுதிப்படுத்தும் பாராளுமன்ற விசேட குழு அதன் தலைவி கலாநிதி சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தலைமையில் பாராளுமன்றத்தில் தனது பரிந்துரைகளை அறிக்கையிடும்போது இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## தேரருக்கு பிடியாணை

கொழும்பு, செப். 29

உடுவே தம்மாலோக தேரரைக் கைதுசெய்யுமாறு கொழும்பு பிரதான நீதவான் நேற்று பிடியாணை பிறப்பித்துள்ளது.

பொல்ஹேன்கொட எலன் மெதினியாராம விகாரையில் ஒலிபெருக்கியைப் பயன்படுத்தி, பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டதாகத் தெரிவித்து, நபர் ஒருவரால் தம்மாலோக தேரருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய, அவர் நீதிமன்றத்தில் ஆஜராகாமை காரணமாகவே அவரைக் கைதுசெய்ய பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, உடுவே தம்மாலோக்க தேரர் நீதிமன்றில் ஆஜராகாத நிலையில், அந்த வழக்கை அடுத்த மாதம் 31ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.09.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.